www.tamilarangam.net

1 வது தேசிய மகாநாடு

# அரசியல் அறிக்கை

தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி

## 1வது தேசிய மகாநாட்டின்

## அரசியல் அறிக்கை

**முன்னுரை:**

இலங்கைத்தீவு பல இனங்களையும் ஓர் அரசையும் கொண்ட நாடாக இன்று உள்ளது. 1505இல் போர்த்துக்கேயர் இந்நாட்டில் காலடி வைத்தபோதிலும் சரி, 1815-ம் ஆண்டு பிரித்தானியர் கண்டியை கைப்பற்றுவதற்கு முன்னரும் சரி, இலங்கைத் தீவானது ஒரே நிர்வாக அமைப்பின்கீழ் இருந்தது கிடையாது. 1815-ம் ஆண்டின் பின்னரே இலங்கை ஒரே நிர்வாக அமைப்பின்கீழ் கொண்டுவரப்பட்டது. அன்றிலிருந்தே இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் ஒடுக்குமுறைக்குள்ளாக்கப் பட்டு வந்துள்ளனர். ஆட்சியாளர் தமது இன ஒடுக்கற் கொள்கையை தொடர்ந்து விரிவுபடுத்தியே வந்துள்ளனர். 1948இன் ''மகத்தான அரசியல் சுதந்திரம்'' தமிழ்பேசும் மக்கள் மீதான ஒடுக்கு முறையின் புதிய பிரவேசம் ஆகும். இதன்பின் ஆட்சிக்கு வந்த அரசுகள் யாவும் தமிழ் பேசும் மக்கள் மீது ஒடுக்குமுறையை நடத்தியே வந்துள்ளன. அந்நியராட்சிக் காலத்திலிருந்து இன ஒடுக்கு முறைக்குள்ளாக்கப் பட்டுவரும் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் பிரச்சினையில் அக்கறையுள்ளவையாக தம்மைக் காட்டிக் கொண்ட குறிப்பிடத்தக்க அரசியல் சக்திகள் கூட காட்டிக் கொடுப்பு, கைவிரிப்பு, வாழாவிருத்தல் ஆகியவற்றையே தமது நடைமுறைகளாக பின்பற்றி வந்துள்ளன. தொடர்ந்து வந்த தமிழ்த் தலைமைகளும் காலத்திற்கு காலம் உயர்மட்ட பேச்சுவார்த்தைகள், பேரம் பேசல்கள்' தனிப்பட்ட செல்வாக்குப் பிரயோகங்கள், வெறும் சொல்லடுக்கு ஒப்பாரிகள், நாசுக்காக நழுவிச் செல்லும் பிரார்த்தனைகள் ஆகியவற்றையே தமது நடைமுறைகளாக கைக்கொண்டு வந்துள்ளன. இன்று மாவட்ட அபிவிருத்திச் சபையை தமிழ் மக்கள் முதுகின் மேல் திணித்து தமிழ் பேசும் மக்களுக்கு துரோகமிழைத்து விட்டது. இன்றைய நிலையில் இலங்கைவாழ் தமிழ்

www.tamilarangam.net



பேசும் மக்கள் தமது சொந்தப் பலத்தில் நம்பிக்கை வைத்து முன்னேற வேண்டியவர்களாயுள்ளனர். தமக்கு முன்னேயுள்ள நேர்மையான சக்திகளை இனங்கண்டு செயல் பூர்வமான ஐக்கியத்தை ஏற்படுத்தவும், தொடர்ச்சியான சரியான போராட்டங்களினூடாக துரோகிகளை இனங்கண்டு நிராகரிக்கவும் வேண்டியவர்களாயுள்ளனர்.

இந்த அரசியல் தேவையின் பொருட்டு உதயமானதே ''தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி'' ஆகும். தமிழ் பேசும் மக்கள் வாழும் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஒன்றிணைந்துள்ள நாம் சுதந்திரமும் தனித்துவமும் மிக்க மக்கள் இயக்கமாக எம்மை வெளிப்படுத்துகிறோம். எம்முன்னணியின் அரசியற் கொள்கையை இவ்வறிக்கையின் மூலம் பிரகடனம் செய்கிறோம். தமிழ் பேசும் மக்களின் விடுதலையே எமது குறிக்கோளாகும்.

தமிழ் பேசும் மக்களென நாம் குறிப்பது வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழர்களையும், முஸ்லிம்களையும் மலையகத்தில் வாழும் தோட்டத் தொழிலாளர்களையும் உள்ளடக்கும். இன்றைய நிலையில் வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்கள் ஒரு தனித்தேசிய இனம் என்பதை உறுதியாக முன்வைக்கிறோம். தேசிய இனமென்பது தனியான சுதந்திரமான அரசை அமைக்கக் கூடிய தகுதியுடைய மக்கள் தொகுதியாகும். முஸ்லிம்கள் மலையக மக்கள் என்பவர்களைப் பொறுத்து அவர்கள் தனியான தேசிய இனமா? அல்லது சிறுபான்மை மக்கள் தொகுதிகளா? என்பதை விவாதத்திற்குரிய பிரச்சினையாக எமது முன்னணிக்குள் இடம் விட்டு தீர்மானத்தை பின்போட்டுள்ளோம். வடக்கு, கிழக்கு தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகமக்கள் ஆகிய மூன்று பிரிவினரிடையேயுள்ள வேறுபாடுகள் தனித்துவங்களை கணக்கிலெடுக்காமல் ஒரே தேசிய இனம் என பலவந்தமாக (மனவிருப்பத்திற்கேற்ப) திணிப்பதை நாம் ஏற்றுக்கொள்வில்லை. இம்மூன்று பிரிவினருக்கிடையே வேறுபாடு இருப்பினும் பெருமின ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டம் மூன்று பிரிவினர்களுக்கும் பொதுவானதும் சார்பானதும் ஆகும்.

நாம் பாராளுமன்ற சந்தர்ப்பவாத சேற்றினுள்ளே விழமாட்டோம். வேற்றுமையில் ஒற்றுமை கண்டு செயற்பட விரும்புகின்ற நாம் எமது மக்களின் நிலை, நமது ஒன்றிணைந்த



செயற்பாட்டின் அவசியம் எம் அனைவருக்கும் பொதுவான இலட்சியங்கள் என்பவை பற்றி தெளிவானதும் பொதுவானதுமான கருத்துகளுக்கு வரவேண்டியது அவசியமாகும். அதன்மூலமே நாம் எமது மனப்பூர்வமான ஒருமைப்பாட்டையும் உறுதியான பரஸ்பர ஒத்துழைப்பு மிக்க செயற்பாடுகளையும் உருவாக்க முடியும்.

‡ ‡ ‡

# இலங்கையின் இனவாதத்தின் தோற்றமும் அதன் இன்றைய நிலவரங்களும்

இலங்கைத் தீவுக்கு ஐரோப்பியர் வருமுன்னர் இலங்கையில் மூன்று பிரதான அரசுகளும், பலசிற்றரசுகளும் இருந்தன. வடக்கில் ஓர் அரசு, மத்தியில் ஓர் அரசு, தென்மேற்கில் ஓர் அரசு என பிரதான மூன்று அரசுகளும் அமைந்திருந்தன. தமிழ் பேசும் மக்கள் வடக்கில் இருந்த அரசிலும் மற்றும் சிற்றரசுகளிலும் வாழ்ந்தனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தரின் பின் வருகை தந்த பிரித்தானியரின் கையில் இலங்கை முழுவதும் வீழ்ச்சியுற்ற பின்னர் இந்த அரசுகள் இல்லா தொழிந்தன. மத்தியப் படுத்தப்பட்ட ஒரே நிர்வாக அமைப்பின் கீழ் இலங்கை முழுவதும் கொண்டுவரப்பட்டது. ஆயினும் நீண்ட கால பாரம்பரிய வேறுபாடுகள் மக்களின் வாழ்க்கையில் இருந்து அகற்றப்பட முடியாமல் போயிற்று. போர்த்துக்கேயரிடம் யாழ்ப்பாண இராச்சியம் வீழ்ச்சியுற்ற போதும்கூட அது ஏனைய பிரதேசங்களில் இருந்து வேறாகவே இனங்காட்டி வந்தது. இதே போல் மலைநாட்டு, கரையோர சிங்களவர்களிடையிலும் வேறுபாடிருந்தது- கரையோர, மலைநாட்டு சிங்களவர்களிடையிலும் வேறுபாடிருந்தது. கரையோர, மலைநாட்டு சிங்களவர்களுக்கிடையிலான வேறுபாடுகள் பௌத்த சிங்கள தேசிய வாதத்தின் முன்னால் காலப்போக்கில் அடிபட்டு போயிற்று.

www.tamilarangam.net



தமிழ் பேசும் மக்கள் இலங்கையில் நீண்டகால பாரம்பரியத்தை உடையவர்கள். இந்நாட்டில் தனித்தனி இராச்சியங்களாகவும், குறுநிலங்களாகவும் வாழ்ந்த காலத்திலும்சரி, ஒன்றிணைக்கப்பட்ட இலங்கையில் மேலைத் தேயத்தவர்களால் ஆளப்பட்ட காலத்திலும்சரி, அந்நியரை எதிர்த்து போராடிய வீரமிக்க வரலாறுகள் தமிழ் பேசும் மக்களுக்கு உண்டு. ஆங்கில ஆட்சியாளர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தேசிய இயக்கங்களில் தமிழ் பேசும் மக்கள் முக்கிய பங்கு வகித்தது மட்டுமன்றி முன்னோடிகளாகவும் இருந்துள்ளனர் தமிழ் பேசும் மக்களுக்கு இந்நாட்டில் இருக்கவேண்டிய வாழ்வுரிமைகள் எவராலும், எவரைவிடவும் குறைத்து மதிப்பிட முடியாதவை.

எனினும் இன்று வரையிலான ஆட்சியாளர்கள் தமிழ் பேசும் மக்களின் தனித்துவத்தைச் சின்னா பின்னப் படுத்துவதிலேயே முதன்மையான கவனத்தை கொண்டுள்ளனர். சுய ஆட்சி முறையில் இலங்கையரை பழக்கப்படுத்துவது என்ற பெயரில் 1852 இல் முதன் முதலாக பிரித்தானியர் ஒரு சட்டசபையை இலங்கையில் அமைத்தனர். இச்சட்டசபை இனவாரிப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டதாகவே இருந்தது. வேறுபட்ட தேசிய இனங்கள் வாழும் இலங்கை போன்ற நாட்டில் சிறுபான்மையினருக்கு வழங்கப்படும் இனவாரி பிரதிநிதித்துவம் எவ்வகையிலும் உதவமுடியாததாக இருந்தும் அதையே சட்டசபை அமைப்பின் முக்கிய விடயமாக ஆங்கிலேயர் வெளிப்படுத்தினர். ஆங்கிலேயர் இதன் தொடர்ச்சியாக இரு மொழி பேசும் மக்களுக்கிடையேயும் பகைமையுணர்ச்சியை நிரந்தரமாக்கி தமது நலன்களை தொடர்ந்தும் இலங்கையில் பாதுகாக்க வழி தேடிக்கொண்டனர்.

இலங்கையின் சுய பொருளாதாரத்தை சிதறடித்த பிரித்தானியர் இந்நாட்டில் பெருந்தோட்ட பயிர்ச் செய்கையை அறிமுகம் செய்தனர். அதிக லாபம் கருதியும் சுதேசிகள் மீதிருந்த அவநம்பிக்கை காரணமாகவும் தென்னிந்தியாவிலிருந்து கூலிகளை இவர்கள் இறக்குமதி செய்தனர். இது இன முரண்பாடு உருவாவதற்கு இன்னொரு ஏதுவாய் அமைந்தது. தோட்டங்களை உருவாக்க தரிசு நிலச்சட்டம் கொண்டுவரப்பட்டு சிங்கள விவசாயிகளிடமிருந்தும் நிலங்கள் பறிக்கப்பட்டன. பிரித்தானியரின் நலன்களுக்காகவும் சுலபமாக சுரண்டப்படுவதற்காகவும் மலை நாட்டில் குடியமர்த்தப்பட்ட இந்திய



கூலிகளை சிங்கள மக்களின் எதிரிகளாக சிங்கள பிற்போக்கு அரசியல் தலைமைகள் பிரச்சாரம் செய்யத் தொடங்கினர். இன்றும் அதனையே செய்கின்றனர். மலையக மக்கள் சிங்கள மக்களுடன் தொடர்பு கொள்ளாதபடிக்கு தோட்டங்கள் கிராமங்களுடன் எதுவித தொடர்புமற்று பிரித்து வைக்கப்பட்டன. வெளியிலிருந்து ஒருவர், அனுமதியின்றி தோட்டங்களுக்குள் உட்செல்ல முடியாது. இதனால் சிங்கள மக்களுக்கும் மலையக மக்களுக்குமிடையில் எதுவித புரிந்து கொள்ளலும் ஏற்படமுடியாது போயிற்று. மலையக மக்கள் இத் தோட்டங்களில் நவீன அடிமைகள் போலவே நடத்தப் பட்டனர்.

1948 இல் சோல்பரி அரசியல் யாப்பிற்கமைய இலங்கை ஓர் சுதந்திர நாடாக பிரகடனம் செய்யப்பட்டது. உண்மையில் இச் சுதந்திரமானது இலங்கையின் பரந்து பட்ட மக்கள் பிரிவுகளுக்கான சுதந்திரமாக அமைய வில்லை. உண்மையில் காலனித்துவ நாடு என்ற அந்தஸ்திலிருந்து நவ காலனித்துவ நாடு என்கின்ற அந்தஸ்தையே பெற்றது. பிரித்தானியரின் நலன் பேணும் பொருளாதார அமைப்புக்கு ஊறுவிளையாத வண்ணம் "கறுப்புத் துரைகளிடம்" ஆட்சி ஒப்படைக்கப்பட்டது. தொழிலாளர், விவசாயிகள், சிறுபான்மை யினங்கள் மீது அடக்கு முறையைச் செய்வதையே இந்த 'சுதந்திர அரசு' தனது யதார்த்தம் ஆக்கிக் கொண்டது. குறிப்பாக இந்த நவகாலனித்துவ அரசு சிறுபான்மை இனங்கள் மீது நடாத்தப்படும் ஒடுக்குதலின் மீது தனது வாழ்வை இருத்திக் கொண்டது. இதன் பின்னணியில் பார்ப்பின் இன்றைய அரசு யந்திரத்திலிருந்து இனப் பாரபட்சம், இன ஒதுக்கல் என்பவற்றை பிரித்து பார்த்தல் இயலாது. எனவே இன ஒடுக்குமுறைக்கெதிரான சிறுபான்மை இனங்களின் போராட்டம் என்பது நவகாலனித்துவ அரசுக்கெதிரான போராட்டமே ஆகும்.

இதுவரையிலான இலங்கையின் அரசாங்கங்கள் சிங்கள மக்கள் உட்பட நாட்டின் அனைத்து மக்கள் மீதும் சுமைகளை அதிகரித்தே வந்திருக்கின்றன. நாளுக்குநாள் மக்களின் வாழ்க்கைத்தரத்தை அதலபாதாளத்திற்கு தள்ளி இருக்கின்றன. இதனை யாரும் மறுப்பதற்கில்லை. தமிழ் மக்களை பொறுத்தவரை பொதுவான அடக்குமுறைகளுடன் விசேடமானதும், பயங்கரமானதுமான பல பிரச்சினைகளை அவர்கள் எதிர்நோக்க வேண்டி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



யுள்ளது. மொழி உரிமைக்கான கோரிக்கை விடுப்பதில் இருந்து மாறி உயிர் வாழ்க்கைக்கு உத்தரவாதம் கோரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இனவெறிக் காடைத்தனங்களினால் அச்சுறுத்தப்பட்டு பலவற்றை பறிகொடுத்த தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களான வடக்கு, கிழக்கு நோக்கி நகரும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். பாரம்பரிய பிரதேசங்களில் இராணுவக்குவிப்புகள் அதிகரிக்கப்படுகின்றன. தமிழ் மக்களின் சொந்தப் பிரதேசங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலமாகவும், பொருளாதார புறக்கணிப்புகள் மூலமாகவும் சிதைக்கப்படுகின்றன. 1935-ம் ஆண்டிலிருந்தே டி. எஸ். சேனநாயக்க போன்றவர்கள் தமிழர்களின் தனித்துவத்தை அழித்தொழிப்பதில் வெளிப்படையாக வகுப்புவாதம் பேசாமல் சூட்சுமமாக செயற்பட்டு வந்துள்ளனர். தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை சிங்கள மயமாக்கும் முயற்சியில் தீவிரமாக முயல்கின்றனர். டி. எஸ். சேனநாயக்காவின் சிங்கள மயமாக்கும் திட்டம் பட்டிப்பளையை கல்லோயாவாக மாற்றும் திட்டத்துடன் ஆரம்பமானது. இத்திட்டம் அல்லை, கந்தளாய், பதவியா போன்ற பல திட்டங்களுடன் இன்று மதுறு ஓயா வரைக்கும் தொடர்கிறது. இன்றைய ஆட்சியாளர்கள்கூட டி. எஸ். சேனநாயக்காவின் காணிக்கொள்கையை பின்பற்றுவதாக வெளிப்படையாகவே கூறுகின்றனர்.

புனித நகர்த்திட்டம் என்ற பெயரில் அதி உத்தமரின் ஆட்சிபீடம் சேருவாவில, திரியாய், தீகவாபி ஆகிய தமிழ்பேசும் மக்களின் பிரதேசங்களை சிங்களமயப்படுத்துகின்றது. சிங்கள மக்கள் மத்தியில் பேரினவாதத்தை வளர்ப்பதன் மூலமே தம்மை பாதுகாத்துக்கொள்ள நவகாலனித்துவ அரசு முயல்கின்றது. இவ்வரசின் சொந்தக்காரர்கள் சிங்கள விவசாயிகள் மீது அக்கறைகொண்டு அவர்களுக்கு காணிகள் வழங்குவதற்காக தமிழ்ப் பகுதிகளில் சிங்கள மக்களை குடியமர்த்துகின்றனர். என்று யாரும் கருதமுடியாது. அதுதான் நோக்கமாக இருப்பின் சிங்கள மக்களின் பாரம்பரிய பிரதேசங்களிலேயே அப்படிச் செய்திருக்கமுடியும். வடக்கு, கிழக்கு பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்களின் நிலப் பயன்களை அபகரிப்பதனால் மட்டும் சிங்கள மக்களின் நிலப்பிரச்சினை தீர்ந்துவிடப்போவதில்லை. இதனை ஆட்சிபீடமேறிய இலங்கையின் எல்லா அரசாங்கங்களும் அறியும். இருந்தபோதும் தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் விவசாயிகளை நிலமின்மைப் பிரச்சினையால் அவதியுறும்



போது சிங்கள மக்களை அங்கு குடியமர்த்துவது திட்டமிட்டே மோதலை உருவாக்கும் ஒரு செயலாகும்.

சிங்கள இனவாத அரசாங்கங்கள் குடியேற்றத்துடன் நின்றுவிடவில்லை. குடியேற்றத்திட்டங்களூடாக இராணுவ அட்டகாசங்கள், குண்டர்களின் காடைத்தனங்கள் ஆகியவற்றையும் வளர்க்கின்றனர். உற்பத்திச் செலவின் அதிகரிப்பு, உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான விலையின்மை, சந்தையின்மை ஆகிய பொதுப்பிரச்சினைகளுக்கு நாடு பரந்த விவசாயிகளுடன் இணைந்து போராடவேண்டிய தமிழ் விவசாயிகள் இன ஒதுக்கல் காரணமாய் உருவாகும் விசேட பிரச்சினைகளுக்குமாய் போராடவேண்டியுள்ளது. பொருளாதார அபிவிருத்தி முயற்சிகளிலும் தமிழ்பேசும் மக்கள் தொடர்ச்சியான புறக்கணிப்புகளையே சந்திக்கவேண்டியுள்ளது. தமிழ்ப்பிரதேசங்களில் புதிதாக ஆரம்பிக்கப்படக்கூடிய தொழிற்றுறைகளில் கவனம் செலுத்தப்படுவதில்லை. இருக்கும் தொழிற்சாலைகளை அடியொற்றி நிர்மாணிக்கப்படும் தொழிற்சாலைகள் அல்லது அவற்றின் பகுதிகள் சிங்களப் பிரதேசங்களிலேயே அரசாங்கங்களினால் நிறுவப்படுகின்றது. இயங்கிக்கொண்டிருக்கின்ற தொழிற்சாலைகளைக்கூட மூடிவிடுதல், அல்லது சிங்களப் பிரதேசங்களிற்கு நகர்த்துதல் போன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. வளர்ந்துவரும் வேலையின்மை கைத்தொழிற்றுறைகளின் வீழ்ச்சி அல்லது அபிவிருத்தியின்மை ஆகியவற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் சிங்கள மக்களுக்கு இவ்வாறான நடவடிக்கைகளினால் பூரண திருப்திகள் கிட்டப்போவதில்லை. இந்தப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இவ்வித நடவடிக்கைகள் அவர்களுக்கென இப்போதிருப்பதையும், இருக்கக்கூடியதையும் பறித்தெடுப்பதற்காகவே அமைகிறது.

அந்நிய நாட்டின் மீன்பிடிக் கப்பல்கள், ரோலர்கள் முதலியன எமது கடல் வளத்தைச் சுரண்டுகின்றன. எமது மீனவர்களின் தொழிற்கருவிகளை சேதப்படுத்துகின்றன. இவற்றுக்கெதிரான உருப்படியான நடவடிக்கைகள் எதனையும் இலங்கை அரசுகள் மேற்கொண்டதில்லை. ஆனால் தமிழ் மீனவர்கள் வாழும் இடங்களில் சிங்கள மீனவர்களை குடியேற ஊக்குவிப்பதும் அதற்கு இராணுவ பலத்தை அளிப்பதும் தமிழ் சிங்கள மீனவர்கள் மத்தியில் தொழிற் போட்டிகளையும், மோதல்

www.tamilarangam.net



களையும் உருவாக்கி வளர்ப்பதிலும் மட்டும் அரசாங்கங்கள் கச்சிதமாகச் செயற்படுகின்றன. இன்று மன்னார், முல்லைத்தீவு, நாயாறு, புன்னன்குடா போன்ற பகுதிகளில் சிங்கள மீனவர்கள் நிரந்தரமாக குடியேற்றப்படுவதுடன் தமிழ் மீனவர்களின் தொழிலுக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளனர்.

பொருளாதார அபிவிருத்தி, மீன்பிடி, விவசாய முயற்சிகள் போன்றவைகளில் தமிழ் பேசும் மக்களும், தமிழர் பிரதேசங்களும் புறக்கணிக்கப்படுவது போலவே அரசு, தனியார் துறைகளில் நிலவும் வேலைவாய்ப்புக்கள், பதவி உயர்வுகள் போன்ற ஜீவனோபாய உரிமைகளிலிருந்தும் தமிழ்பேசும் மக்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். தேசிய ரீதியாக இவை வழங்கப்படுகிறபோது திறமை அடிப்படையில் வழங்கப்படாதது மாத்திரமல்லாது சனத்தொகை விகிதாசார அடிப்படையில் கூட வழங்கப்படுவதில்லை. எழுதுவினைஞர் மற்றும் சிவில் நிர்வாக உத்தியோகங்களில் 10% க்கும் குறைவான இடங்களும் பொலிஸ் இராணுவத்தில் 4%ற்கும் குறைவான இடங்களுமே கடந்த பதினைந்து வருடகாலத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திறமையுள்ள சகலருக்கும் உயர்கல்வி வாய்ப்பளிக்க வக்கற்ற இலங்கை அரசாங்கங்கள் தமது கையாலாகாத்தனத்தை மறைக்கவேண்டி அளவை அதிகரிப்பதற்கு பதிலாக ஆட்சிகளை மாற்றும் வேலையையே செய்து வருகின்றன. பல்வேறு வழிகளில் தரப்படுத்துவதன்மூலம் தமிழ் மாணவர்களின் உயர்கல்விவாய்ப்பு கடந்த காலங்களை விட மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உயர் கல்விக்கான தேவைகள் அதிகரித்து வரும்பொழுது இருப்பதையும் பறிப்பது சாதாரண விடயமாகாது. தாம் செய்யும் இவ்வநீதியான செயல்களோடு நிற்காது பெருந் தேசிய இனவெறியர்கள் தமிழ் மாணவர்கள் மீது அவதூறு பொழிவதற்கும் முயற்சிக்கின்றனர். இவற்றின்மூலம் தமிழ் சிங்கள மாணவரிடையே போட்டியையும் ஒருவர்மீது ஒருவர் வெறுப்பையும் சந்தேகத்தையும் வளர்த்துக்கொள்ள வழியை அமைக்கின்றனர்.

மொழி உரிமைபற்றிய விடயத்திலும் தீர்க்கக்கூடிய பல சந்தர்ப்பங்களிலும் பிரச்சினையை மேலும் வளர்ப்பதே நடைமுறையாக இருந்து வந்திருக்கிறது. ஜே. ஆர். போன்றவர்கள் 1944-ம் ஆண்டிலேயே தமிழ்மொழியைப் புறக்கணிக்கும் முயற்



சியை ஆரம்பித்தனர். அன்றைய அரசாங்க சபையில் ''சிங்களம்'' எல்லா பாடசாலைகளிலும் போதனா மொழியாகவும், எல்லா பரீட்சைகளிலும் கட்டாய பாடமாகவும் இருக்கவேண்டுமென ஜே. ஆர். தீர்மானம் கொண்டுவந்தார். இதுவும் இதன் பின்னர் யூ. என். பி. யின் களனி மாநாட்டு ''சிங்களம் மட்டும் தீர்மானம்'', பண்டாரநாயக்காவின ''24 மணி நேரத்தில் சிங்களம் ஆட்சிமொழியாகும்'' பிரசாரம் போன்றவையும் தமிழுக்குரிய இடத்தை அளிக்கும் எண்ணம் யாருக்குமிருக்கவில்லை என்பதையே காட்டுகின்றது. ''சிங்களம் மட்டும்'' கொள்கையை "இரு மொழிக்கும் சம அந்தஸ்து" கொள்கையில் அப்போது ஊன்றிநின்ற இடதுசாரிகள் எதிர்த்தனர். அவர்களது கூட்டங்களையே அடித்துக் குழப்புமளவிற்கு இனவாதிகள் செயற்பட்டனர். இறுதியில் இந்த இடதுசாரிகள் பாராளுமன்ற சந்தர்ப்பவாத சேற்றுக்குள் விழுந்து சம அந்தஸ்து கொள்கையை நழுவவிட்டனர்.

பண்டா-செல்வா ஒப்பந்தம் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு குறைந்தபட்ச தீர்வுகள் முன்வைக்கப்பட்டது. அதற்கெதிராக இன்றைய அதி உத்தமர் ஜே. ஆர். தலைமையில் புகழ்பெற்ற ''கண்டி யாத்திரை" நடாத்தப்பட்டது. இதன் விளைவாக பண்டா-செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது. தமிழ் மொழி உபயோகத்திற்கான மசோதா ஒன்றினை பண்டாரநாயக்கா கொண்டுவந்த போதும் அது உபயோகமான எந்த விதிகளையும் கொண்டிருக்கவில்லை.

1966 ஜனவரியில் டட்லி அரசாங்கம் தமிழ் பேசும் மக்களின் பொருட்டு சில விதிகளை ஏற்படுத்த முயன்றபோது சுதந்திர, சமஜமாசக், கம்யூனிஸ்ட் கட்சியினர் இணைந்து பொது வேலைநிறுத்தம் ஒன்றின் மூலம் அவ்விதிகளுக்கு எதிர்ப்புக் காட்டினர். இதனால் அதுவும் கைவிடப்பட்டது. 1972-ம் ஆண்டு இலங்கை குடியரசாகப் பிரகடனம் செய்யப்பட்டபோது சோல்பரி சட்டத்தில் பெயரளவில் சிறுபான்மையினருக்கான பாதுகாப்பை அளித்த 29வது சரத்துக்கூட அகற்றப்பட்டது.

அரசாங்கங்களின் இன ஒடுக்கற் கொள்கையின் பின்னணியுடன் இனவெறியர்கள் தமிழர் விரோத பிரசாரங்களையும் காடைத்தனங்களையும் தூண்டி விடுகின்றனர். 1958இல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இனக் கொலைவெறித்தாண்டவத்தில் பல தமிழ் மக்களின் உயிர்கள் அநியாயமாக பறிக்கப்பட்டன. இதன்பின் 1974-ம் ஆண்டு தமிழாராட்சி மாநாட்டுச் சம்பவங்கள், புத்தளம் பள்ளிவாசல் சம்பவங்கள் நடந்தேறின. இந்தத் துயர வடுக்கள் அகலு முன்பே 1977-ம் ஆவணியில் இனவெறி பிரதமராகவிருந்த ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் தமிழ் இனக் கொலைப்படலம் தொடக்கிவைக்கப்பட்டது. "யுத்தம் என்றால் யுத்தம்" "சமாதானமென்றால் சமாதானம்" என்ற வானொலி உரைமூலம் தமிழ் மக்களின் உயிர்களுக்கும் உடமைகளுக்குமான இன அழிவு ஆரம்பிக்கப்பட்டது. இந்த கலவர காலத்தில் தரை, கடல், ஆகாயமார்க்கமாக உயிரிழந்த, மானமிழந்த, சொத்திழந்த தமிழ் மக்கள் கூட்டம் கூட்டமாக வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டதை யாரும் மறக்கமுடியாது. இன்னமும்கூட இனக்கலவரம் ஒன்று வெடிப்பதற்கான பதட்டநிலையொன்று தொடர்ந்தும் வைக்கப்பட்டு வருகின்றது. கலவரங்களின் போது முன்பு வட கிழக்கிற்கு ஓடிவரும் தமிழ் மக்கள் இன்று வட கிழக்கிலேயே பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்றனர். இதன் பின்னணிச் சூத்திரதாரியாக அதி உத்தமரின் தார்மீக அரசே இருந்து வருகின்றது என்பதில் சந்தேகமில்லை. வட கிழக்கில் இன்று குவிக்கப்படும் இராணுவங்கள் இனக் கொலைகளுக்கான "உசார் நிலைகள்" என்றே கருத வேண்டி உள்ளது. 1979 நடுப்பகுதியில் இருந்து வடபகுதியில் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால நிலையும், அதையொட்டி நிகழ்ந்த இளைஞர்களின் படுகொலையும், முப்படைகளின் அட்டகாசமும் தமிழ் மக்களால் மறக்க முடியாத ஒன்று.

மலையகத் தமிழ் மக்களது நிலையும் கலவரங்களாலும் காடைத்தனங்களினாலும் அடிக்கடி அச்சுறுத்தப்படுகின்றது. ஆட்சியாளர்களின் கபடத்தனங்களினால் மிகக் கேவலமான அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர். 1948-ம் ஆண்டின் பிரஜா உரிமைச் சட்டம் இவர்களது வாக்குரிமையைப் பறித்து நாடற்றவர்களாக்கியது. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் இவர்களை உயிரற்ற பண்டங்களாக்கியது. கல்வி, நிலம், குடியிருப்பு, சுகாதாரம் தொழில் உத்தரவாதமின்மை போன்றவை இவர்களை நாளாந்தம் வாட்டும் பிரச்சினைகளாகும். நாட்டின் மிகப்பெரும் அந்நிய செலவாணியைப் பெற்றுத்தரும் இவர்கள், அவ்வந்நிய செலவாணியின் மூலம் பெறப்படும் சமுக நலத் திட்டங்களிலிருந்து விலக்கிவைக்கப்பட்டுள்ளனர். நாட்டின் மிகத் தாழ்ந்த வருமானம் பெறுபவர்களும் இவர்களே ஆவர். இலங்கையில் நிம்மதியாக வாழமுடியாமலும், இந்தியாவிற்கு செல்ல முடியாமலும் இவர்களில் அநேகர் இக்கட்டான நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். சிங்கள மக்கள் மத்தியில் அதிகரித்து வரும் வேலைவாய்ப்பின்மை, மலையகத்தமிழரின் தோட்டத்துறை வேலைவாய்ப்பிற்கெதிராக நிறுத்தப்பட்டு, நிலைமைகள் வகுப்புவாதநோக்கில் கையாளப்படுகின்றன. தோட்டங்களை தேசியமயமாக்கியபின் கூலியாட்கள் தரத்திற்கு மேற்பட்ட வேலை வாய்ப்புகள் இவர்களிடமிருந்து பறிக்கப்பட்டுவிட்டன. சென்ற அரசாங்க காலத்தில் தொழிலாளர் தோட்டங்களைவிட்டு இரவோடிரவாக மனிதாபிமானமற்ற முறையில் வெளியேற்றப்பட்டனர். இவர்களில் சிலர் காடுகளில்போய் குடியேறினர். காட்டை வெட்டி குடிசையமைத்து விவசாயம் செய்யக்கூட அனுமதிக்காமல் துரத்தப்பட்டனர். புனையில் வீடுகள் கொழுத்தப்பட்டு பொலிசாரினால் துரத்தியடிக்கப்பட்டது மறக்கமுடியாத சம்பவமாகும்.



1930ம் ஆண்டளவில் ஏ. ஈ. குணசிங்கா ஆரம்பித்து வைத்த இந்திய எதிர்ப்பு என்ற கோஷம் வளர்க்கப்பட்டு வருகின்றது. மலையக மக்கள் அரசு நிலம் பெறுவது மிக மிகச் சிரமானது. சொந்த நிலம் கொண்டிருந்த ஒரு சிலர் கூட அவற்றை பாதுகாக்க முடியாதபடி காடைத்தனத்தால் அச்சுறுத்தப்படுகின்றனர். குறைந்த விலைக்கு நிலத்தை விற்றுவிட்டு ஓடுவதற்கு நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். இன்று நட்சா திட்டம் என்று ஒரு திட்டத்தை அரசு அறிமுகம் செய்துள்ளது. நட்டத்தில் இயங்கும் தோட்டங்களில் மாற்றுப் பயிரை செய்வதும் கிராமங்களை உருவாக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகச் சொல்லப்பட்டு, தோட்டங்கள் சிங்கள மக்களுக்கு பகிர்ந்தளிக்கப் படுகிறது. இது மேலும் தோட்டத் தொழிலாளரை வீதிக்கு அடித்துத் துரத்தும் செயலாகவே அமையும். கடந்த 1977 ஆவணி கலவரத்தில் பாதிக்கப் பட்டு வவுனியாப் பகுதியில் வந்து குடியேறியவர்களை கூட அரசு இன்று வெளியேற்றும் நடவடிக்கையில் இறங்கியுள்ளது. மலையகத்தில் பல தொழிற்சங்கங்கள், பெயரளவிலான இயக்கங்கள் மலையக மக்களின் பிரச்சனைகளுக்காக வேலை செய்வதாக கூறிக் கொண்டாலும் யாரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக தெரி

www.tamilarangam.net



யவில்லை. மலையக மக்கள் நம்பிக்கையிழந்த நிலையிலேயே வாழ்கின்றனர்.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை மற்றைய இலங்கை வாழ் தமிழ் மக்களின் பிரச்சனைகளோடு தொடர்பற்றவர்கள் எனும் அபிப்பிராயமே பரவலாக ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கிறது தமிழ் மக்களின் போராட்டம் உத்தியோக மொழி சம்பந்தப் பட்டதாக இருந்த பொழுது முஸ்லிம் சமுகத்தினரின் வாழ்நிலை காரணமாக அதில் அவர்களது பங்களிப்புகள் குறைவானதாக இருந்திருக்கலாம். ஆனால் சிறுபான்மை இனங்களும் தத்தமது தனித்துவங்களையும், பாரம் பரியங்களையும் பாதுகாப்பதற்கு போராடுகின்ற இன்றைய காலகட்டத்தில் முஸ்லிம் மக்களின் பங்களிப்பும் இணைப்பும் பிரிக்கக்கூடிய ஒன்றல்ல. முஸ்லீம்கள் தமது தனித்துவங்களை காப்பதற்கு பல போராட்டங்களையும், தியாகங்களையும் இந்த நாட்டு வரலாற்றில் பொறித்து வைத்துள்ளதை நாம் மறந்துவிட முடியாது. 1915 இல் இனக்கலவரம், 1976 புத்தளம் பள்ளிவாசல் சம்பவம் 1980 கொம்பனித்தெரு பள்ளிவாசல் சம்பவம் போன்றவை குறிப்பிடத்தக்கவை. முஸ்லிம்களை சந்தர்ப்பவாத சமூகமாக காட்டி லாபம் தேடிய முஸ்லிம் தலைவர்களே இன்று தவிர்க்கமுடியாமல் "முஸ்லிம் மக்கள் சலுகைகளையல்ல உரிமைகளையே கோருகின்றனர்." என்று சொல்லவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஒருகாலத்தில் முஸ்லிம்களின் தாய்மொழி சிங்களம் என்று இயக்கம் நடத்திய தலைவர்களே நெருக்குதல்களினால் முஸ்லிம்களின் மொழி மற்றும் பிரச்சினைகள் பற்றி சொல்லவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். சிங்கள பெருந்தேசிய இன அரசு திகவாபி, புனிதநகர்த்திட்டம் போன்றவைகள் மூலம் முஸ்லிம் மக்களின் நிலங்களை அபகரிக்க ஆரம்பித்துவிட்டது. முஸ்லிம்களின் கூடிவாழும் கலாச்சாரம், பாரம்பரியத்தை அபீவிருத்தி என்ற பெயரில் திட்டமிட்டு சிதைக்கும் முயற்சிகள் நடக்கின்றன. ஏற்கனவே அபிவிருத்தி என்ற பெயரால் கிழக்கு மாகாண நிலங்கள் பறிக்கப்பட்டபோது தமிழர்களைப் போன்றே முஸ்லிம்களும் பாதிக்கப் பட்டனர். சிங்கள மகா ஜன பெரமுன போன்ற இயக்கங்கள் மதம் என்ற பெயரில் முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சாரத்தை செய்து வருகின்றனர்.

சாதாரண மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு வக்கற்ற இலங்கையின் ஆட்சியமைப்பு நாட்டின் உயர் வகுப்பினரையே பேணிக்காத்து வந்துள்ளது. மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பதிலாக இந்த எஜமானர்கள் மக்களை மோதவிட்டு ஒற்றுமையைக் குலைத்து தமது சுகபோக வாழ்க்கைகளை உத்தரவாதம் செய்து கொண்டனர்



சிங்கள பெருந்தேசிய இன வாதத்தை சிங்கள உயர் வகுப்பினர் எவ்வாறு பேணி வளர்த்து வந்தனரோ அவ்வாறே தமிழ் மக்கள் மத்தியிலான உயர் வகுப்பினரும் பெரும் தேசிய வாதத்தை காட்டி குறுந்தேசிய வாதத்தை பேணி வளர்த்து வந்தனர் இதன் மூலம் சிங்கள தமிழ் உயர் வகுப்பினரின நலன்கள் காத்துக்கொள்ளப் பட்டன. 1944 இல் போதனு மொழியாகக்கூட தமிழை இல்லாமல் செய்ய முயற்சித்த ஜே. ஆர் ஜெயவர்த்தன இன்று தேசிய மொழி அந்தஸ்தை தமிழுக்கு அளித்து மொழிப் பிரச்சினையைத் தீர்த்து விட்டேன் என்கிறார். டி. எஸ். சேனநாயக்காவின் காணிக் கொள்கை என்ற பெயரில் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை கபளிகரம் செய்யும் திட்டத்தை ஒருபுறம் செய்து கொண்டு மறுபுறம் காலம் கடந்து பயனற்று போன தேசிய மொழி அந்தஸ்தை வழங்கி வேடம் போடுகிறார். நமது தமிழ்த் தலைமைகளோ அன்று அன்னியத் தளங்கள் தமிழ்ப் பகுதிகளில் வேண்டுமென்று வாதாடினர். இன்றோ தமிழ்ப் பகுதிகளுக்கு ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் மாவட்ட அபிவிருத்தி சபைகள் வேண்டுமென்று வாதாடுகின்றனர். அன்று இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்கு அடித்தளம் போட்ட பிரித்தானிய அந்நியர்களுக்காக வாதாடிய இவர்கள் இன்று இனப்பிரச்சினைகளை வளர்த்துக் காத்துவரும் ஜே. ஆர் ஜெயவர்த்தனவிற்கான பாராளுமன்றத்தில் கைகளை உயர்த்தி உள்ளார்கள். தோற்றத்தில் இலங்கையின் பெருந்தேசிய இனவாதிகளும், குறுந்தேசிய இனவாதிகளும் வேறு வேறாக காட்சியளித்தாலும் மக்களைப் பிரித்து, அவர்களிடையே பிளவை வளர்த்து அவர்களை அடக்கி யொடுக்குவதில் ஒருவரை ஒருவர் சார்ந்தே செல்கின்றனர். இவர்கள் அந்நிய நலன்களைப் பேணும் இலங்கையின் அரசியல் ஏஜண்டுகளாவர்.

‡ ‡ ‡

www.tamilarangam.net



# இலங்கையில் இனவாதமும் தேசியக் கட்சிகளும்.

இலங்கையின் அரசியற் கட்சிகளின் தோற்றங்கள் 1930 களின் பிற்பகுதியிலேயே ஆரம்பமாகின்றன. இடதுசாரி இயக்கத்தின் ஆரம்பமாய் சூரிய மல் இயக்கம் தோன்றியது. லங்கா சமஜமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி இன்னும் பல இடதுசாரி குழுக்கள் இவ்வியக்கத்தின் பின் தொடர்ச்சிகளே. டி. எஸ். சேனநாயக்காவின் தலைமையில் ஸ்தாபிக்கப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி இலங்கையின் முதலாவது 'சுதந்திர அரசை' ஆக்கியது இக்கட்சியிலிருந்து S. W. R. D பண்டாரநாயக்கா பிரிந்து சென்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியை உருவாக்கினர். மக்கள் ஐக்கிய முன்னணி என்ற அமைப்பின் மூலம் 1956 இல் அரசாங்கத்தை அமைத்துக் கொண்டனர். ஐக்கிய தேசிய கட்சி சிறீலங்கா சுதந்திரக்கட்சி இரண்டும் மாறி மாறிப் பதவிக்கு வந்தன. இன ஒதுக்கல். இன ஒடுக்குமுறை என்பவைகளை சிறுபான்மை இனங்கள் மீது திணிப்பதில் ஒன்றுக்கொன்று சளைக்காது செயற்பட்டு வந்தன. யூ. என். பி. யின் 1948 பிரஜா உரிமைச்சட்டம், கல்லோயா குடியேற்றத் திட்டம், களனி மகாநாட்டு தீர்மானம், கண்டி பாதயாத்திரை போன்றவையும் 1977 இனக்கலவரம், 1979 வடபகுதி இளைஞர்கள் படுகொலை என்பவற்றுடன் அதன் இன்றைய இன ஒடுக்கல் நடவடிக்கைகள் மூலம் யூ. என். பி யின் இனவொடுக்கற் கொள்கை தெளிவாகிறது. 1956 இல் சொல்லப்பட்ட ''24 மணி நேரத்தில் சிங்களம் மட்டும்'' தீர்மானம், 1958 இனக்கலவரம், 1966 ஜனவரி 8 ஊர்வலம் வேலைநிறுத்தம், 1974 தமிழாராய்ச்சி மகாநாட்டுச் சம்பவம், 1976 புத்தளம் பள்ளிவாசல் சம்பவம் மற்றும் நடவடிக்கைகள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இனவெறிக்கொள்கையை புலப்படுத்துகிறது. சுதந்திரக்கட்சியின் 1972 அரசியல் யாப்பாயினும் சரி, ஐக்கியதேசியக் கட்சியின் 1978 இன் அரசியல் யாப்பாயினும் சரி சிறுபான்மை இனங்களின் நலவுரிமை பற்றி அக்கறைப்பட்டது கிடையாது இந்த அரசியல் யாப்புகள் சிறுபான்மை யினங்களின் நலன்கள் மீது கவலை கொள்ளாதது மட்டுமல்ல சிறுபான்மையினங்களின் நலன்களுக்கு எதிராக சிங்கள பெருந்தேசிய இனவாதத்தில் ஆழ்ந்த கவனம் செலுத்தியிருந்தன இந்த இரண்டு அரசியல் யாப்புகளுமே இலங்கைத் தீவானது ஓர் பௌத்த சிங்கள நாடு என்ற எண்ணக் கருவின் மீது எழுப்பப் பட்டிருந்தன. தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமை, பிரதேச உரிமை, உயிர்வாழும் உரிமை என்பவைகளுக்கு எதிராக இந்த இரண்டு கட்சிகளும் நடந்துகொண்ட சந்தர்ப்பங்கள் இலங்கை வரலாற்றில் அனேகம் உண்டு. எனவே இவர்கள் சிங்கள பெருந்தேசிய இனவாதத்தின் பிரதிநிதிகளே ஒழிய சிறுபான்மை இனங்களையும் பிரதிநிதித்துவப் படுத்தும் தேசிய கட்சிகள் அல்ல என்பது தெளிவாகிறது. தொழிலாளர் கட்சிகள் என்று அழைக்கப்பட்ட கட்சிகள் சம அந்தஸ்து கொள்கையையே ஆரம்பத்தில் பின்பற்றினர். கம்யூனிஸ்ட் கட்சி 1955 இல் பிரதேச சுயாட்சி எனும் கொள்கையை முன்வைத்தனர். இக்கொள்கைகளை முன்வைத்தாலும் இவற்றிற்கான ஆக்கபூர்வமான போராட்டங்களை சமசமாஜக் கட்சியோ, கம்யூனிஸ்ட் கட்சியோ நடத்தவில்லை. ஆரம்பத்தில் சம அந்தஸ்துக் கொள்கையை முன்வைத்த இவர்கள் பாராளுமன்றச் சேற்றில் முற்றாக அமிழ்ந்து சிறுபான்மை இனங்கள் பற்றிய தமது கடந்தகால கொள்கைகளை கைவிட்டனர். தமிழ்மொழி விசேட மசோதாவிற்கு எதிராக 1966 ஜனவரியில் நிகழ்ந்த வகுப்புவாத வேலை நிறுத்தத்தில் முக்கிய பாத்திரம் வகித்தனர். எல்லாவற்றுக்கும் உச்சமாக தமிழ் பேசும் மக்களை புறக்கணித்து சிங்கள பெருந்தேசிய இனவெறிக்கு சட்டரீதியான அந்தஸ்தைக் கொடுத்த 1972ம் ஆண்டின் அரசியல் யாப்பு இவர்களின் தலைவர்களினாலேயே வெளியிடப்பட்டது. இவர்களிருவரும் ''தோசை மசால் வடை'' கோஷம் போட்டதை தமிழ் பேசும் மக்கள் மறந்துவிட முடியாது.

மக்கள் விடுதலை முன்னணியினர் 1971 ஏப்ரல் கிளர்ச்சிக்கு முன் தங்கள் இரகசிய வகுப்புகளில் இந்திய விஸ்தரிப்புவாதம் என்ற தலைப்பின் கீழ் தவறான வியாக்கியானம் கொடுத்து சிங்கள இளைஞர்களை தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக வளர்த்தனர். இவர்கள் தமிழர்களை இந்திய விஸ்தரிப்பு வாதிகளின் ஏஜண்டுகள் எனவும் வேறும் பல தவறான கருத்துகளையும் விதைத்தனர். இன்று இவர்கள் குரலை மாற்றி சுய நிர்ணய உரிமை பற்றி இடத்திற் கேற்றவாறு பேசுகிறார்கள். தமது இனவெறி அரசியலை விமர்சனம் செய்யாதது மட்டுமல்ல அதிகாரக்குரலுடன் பிரிவினையை அனுமதியோம் எனவும் பேசுகின்றனர். தமிழர்களுக்கென பாரம்பரிய பிரதேசங்கள் இருப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பதை ஏற்றுக்கொண்டது கிடையாது. மற்றும் பல இடதுசாரி குழுக்கள் ஆரம்பத்திலிருந்து தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளில் அக்கறை காட்டி வந்தன. ஆனாலும் இவை சமதர்ம சமூக அமைப்பில் இவையெல்லாம் தீர்க்கப்படும் என்று சொல்லி நாளாந்தம் ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டங்களை நடத்த தவறி விட்டன. இன்று கூட பல குழுக்கள் ''சுயநிர்ணய உரிமை'' பற்றிப் பேசினாலும் அவை சிங்கள பகுதிகளில் உறுதியாக திட்டமிட்ட சிங்கள குடியேற்றத்திற்கெதிராக கருத்தை வெளியிடமுடியாதுள்ளனர். முன்பை விட இன்று பல இடதுசாரிக் குழுக்கள் தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளில் அக்கறை கொள்வது வரவேற்கத் தக்கது. இக்குழுக்கள் இலங்கையின் சமூக வாழ்வில் குறிப்பிடத்தக்க பாத்திரம் வகிக்க முடியாத நிலையிலேயே உள்ளனர் தேசிய ரீதியான எந்த கட்சியையோ இயக்கத்தையோ தமிழ் பேசும் மக்கள் ஏற்றுக் கொள்ளும் நிலை இன்று அற்றுப்போய் உள்ளது.

✢ ✢ ✢

## தமிழ்த் தலைமையின் தொடர்ச்சியான போக்கும் தமிழ் பேசும் மக்களின் இன்றைய நிலையும்

அந்நியராட்சிக் காலத்திலிருந்து இன்று வரையும் தமிழ்த் தலைமைகள் தமிழ் பேசும் மக்களுக்கு சரியான வழி காட்டலைக் கொடுக்கத் தவறிவிட்டன. ஆரம்பத்தில் ஐம்பதுக்கு ஐம்பது கோரிய ஜீ. ஜீ. பொன்னம்பலம் மந்திரிப் பதவிக்காய் ஐம்பதுக்கு ஐம்பதை கைவிட்டது மாத்திரமன்றி மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதற்கு சிங்கள பெருமினவாதிகளுக்கு உடந்தையாக இருந்தார். மலையகத் தமிழ் மக்களின் தனிப் பெரும் தலைவரென புகழப்படும் தொண்டமானும் இந்த அநீதிக்கு எதிராக உருப்படியாக போராட்டங்கள் எதையும் நடத்தவில்லை. இத்தருணத்திலேயே தமிழரசுக்கட்சி உருவாக்கப் பட்டது. தமிழ்த்தேசிய அபிலாசை கொண்டோர் இக்கட்சியின் பின்னால் அணிதிரண்டனர். இவர்



கள் தமிழரசு சமஷ்டி என்று காலத்துக்குக் காலம் கோரிக்கைகள் வைத்தாலும் தொடர்ந்து தமிழ் மக்கள் உரிமைகளை இழந்தே வந்துள்ளார்கள். பின் பண்டாரநாயக்காவின் தனிச்சிங்களச் சட்டம் இவர்களை விழிப்படைய வைத்தது. பண்டா–செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்டு அதற்கெதிராக யூ. என். பி கொழும்பு – கண்டி பாதயாத்திரை நடத்திய பொழுது இவர்கள் ''ஸ்ரீ'' எதிர்ப்பு போராட்டம் ஆரம்பித்து ஒப்பந்தத்தை கிழித்தெறிய வழிசமைத்தனர். பண்டாரநாயக்கா அரசு செய்த நடவடிக்கைகளான அந்நியத் தளங்களை அகற்றுதல் வெளிநாட்டு எண்ணெய்க் கம்பனிகள் தேசிய மயம், பாடசாலைத் தேசிய மயம் போன்ற நடவடிக்கைகளைக் கூட தமது நலன் கருதி தமிழரசுக்கட்சியினர் எதிர்த்தனர். 1961 இல் நடாத்தப்பட்ட சத்தியாக்கிரக இயக்கத்தில் தமிழ் பேசும் மக்கள் பூரண உணர்வுடன் பங்குபற்றினர். கிழக்கிலங்கையின் முஸ்லிம் மக்களும் இவ்வியக்கத்தில் உற்சாகமாக கலந்து கொண்டனர். தலைவர்கள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டு மக்கள் இராணுவ அடக்குமுறைக்குள்ளாக்கப் பட்டனர். இதன்பின் இவர்கள் சத்தியாக்கிரகத்தை விட்டு தேர்தலிலே குதித்தனர். 1965 இல் திரும்பவும் மந்திரிப் பதவியைப் பெற்று இனவெறி யூ. என். பி யுடன் கூட்டுச்சேர்ந்து தமிழ் மக்களை காட்டிக் கொடுத்தனர். யூ. என். பி தேசிய அரசாங்கத் தூண்களாக இவர்கள் இருந்த போது கல்முனைத்தொகுதியில் நிகழ்ந்த இடைத்தேர்தலில் சுயாட்சிக் கழகத்திற்கு எதிராக அபேட்சகரை நிறுத்தி யூ. என் பி. அமைச்சர்களுடன் தோளோடு தோள்நின்று தேர்தல் களம் கண்டனர். யூ. என். பி தேசிய அரசாங்கம் திருகோணமலையை சிங்கள மயப்படுத்தும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்திய போதும் இவர்கள் இந்த தேசிய அரசில் ஒட்டியபடியே இருந்தனர். இறுதியில் அன்றைய பிரதமர் டட்லி சேனநாயக்கா தனது குறைச்சுருட்டை வீசி எறிவது போல் இவர்களை தேசிய அரசில் இருந்து தூக்கி எறிந்தார். இவர்கள் விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை. என்பது போல் இராஜினாமா நாடகம் ஆடினர். 1970 பொதுத் தேர்தல் மேடைகளில் அரசாங்கம் எது என்று தீர்மானிப்பது தாங்கள் தான் என்று முட்டாள்த்தனமாக முழங்கித் திரிந்தனர். தேர்தலில் கூட்டு முன்னணி மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெற்றது. இவர்களின் அரசியல் ஆருடம் பொய்த்துப் போனதால் இவர்கள் பேதலித்தனர். இவர்கள் தமிழ் பேசும் மக்களின் செயற்பலத்தில் நம்

www.tamilarangam.net



பிக்கையிழந்து "தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்." எனக்கூறி தமது பழைய நடவடிக்கைகளையே தொடர்ந்தனர். கூட்டு முன்னணி அரசின் பல்கலைக்கழகங்களுக்கான தரப்படுத்தலை எதிர்த்து தமிழ் இளைஞர்கள் சீறி எழுந்தனர்.

1970 இல் ஆட்சி பீடம் அமர்ந்த கூட்டு முன்னணி அரசுமேலும் மேலும் தமிழ் பேசும் மக்கள் மீது இன ஒடுக்குமுறையை அதிகரித்தது. அரசின் இந்நடவடிக்கை தமிழ் பேசும் மக்களை மேலும் வெறுப்பும், கொதிப்பும் அடையச் செய்தது. சேர்ந்து வாழுவதில் நம்பிக்கையிழந்த தமிழ் இளைஞர்கள் தனிநாடு எனும் கோரிக்கையை அரசியல் அரங்கிற்கு கொண்டுவந்தனர். தமது சரிந்து போகும் செல்வாக்கை இச்சந்தர்ப்பத்தைப் பாவித்து மீட்க தமிழ் காங்கிரசுடனும், தொண்டமான் காங்கிரசுடனும் இணைந்து தமிழர் கூட்டணி எனும் அமைப்பை உருவாக்கினர். தமிழர் கூட்டணி பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி எனப்பெயர் மாற்றம் பெற்றது. இது தனிநாடு எனும் கோரிக்கையை முன்வைத்தது. தாம் சமஷ்டி, பிரதேச சபை, மாவட்டசபை எனும் கோரிக்கைகளை முன்வைத்தும் எதுவும் கிடைக்காததால் தனிநாடுதான் ஒரே தீர்வு என் முழங்கினர். தமிழ் தலைமை ஐம்பதுக்கு ஐம்பது, தமிழ் அரசு சமஷ்டி, பிரதேசசபை, மாவட்டசபை என்பவைகளை இனவாத கூச்சலுடன் சேர்த்து முன்வைத்தனரே தவிர பாராளுமன்றத்திற்கு வெளியே செயல்பூர்வமான போராட்டங்கள் எதையும் நடாத்தவில்லை.

1977 ஆம் ஆண்டு தேர்தல் மேடையிலேயே, கூட்டணித் தலைவர்களில் ஒருவரான தொண்டமான் தனிநாட்டுக் கொள்கையை கைவிட்டார். தமிழர் விடுதலைக் கூட்டணி எஞ்சிய தலைவர்கள் தேர்தலில் தமக்கு வாக்களிக்கும் படியும் தாம் தேர்தலில் வெற்றிபெற்றபின்

1. தமிழ் தேசிய மன்றம் அமைப்போம்.
2. தனிநாடு காண பாராளுமன்றத்தை பிரச்சார மேடையாக பாவிப்போம்.
3. திருகோணமலையை தமிழ் ஈழ தலைநகராக்குவோம்

என தொகுதி தோறும் போராட்ட மேடை போட்டு முழங்கினர். தேர்தல் முடிவுகள் வந்தன. மிகப் பெரும்பான்



மையான தமிழ்த் தொகுதிகளில் இவர்களே வெற்றியீட்டினர். ஆனால் நடந்தது என்ன? இன்று திருகோணமலையே சிங்களமயப் படுத்தப்பட்டு முற்றாக பறிபோகும் நிலையில் உள்ளது. அதை தடுக்க எவ்விதமான போராட்டமும் இல்லை. 1977 இல் ஜே. ஆர். அரசால் தொடக்கி வைத்த இனக்கொலைகளின் இரத்தக்கறை காயும் முன்னரே தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவரான தொண்டமான் ஜே. ஆரின் அரசில் மந்திரியானார் கூட்டணியின் ஏனைய பாராளுமன்ற அங்கத்தவர்கள் மந்திரிமாரை வரவேற்றல், செல்வாக்கு பிரயோகித்தல், கோட்டாக்கள் பெறல் மூலம் யூ என். பியுடன் கள்ளக் கூட்டுச்சேர்ந்து தமிழ் மக்களை காட்டிக் கொடுத்தனர். இலங்கையின் கீர்த்திமிக்க இனவெறியரும். பிற்போக்கு பாஸிஸ வாதியும் ஆன ஜே. ஆர் ஜெயவர்த்தன ஜனாதிபதியாக பதவி ஏற்கும் பொருட்டு பாராளுமன்ற அங்கத்துவத்திலிருந்து விடுபட்ட பிரியாவிடை நிகழ்ச்சியின் போது தமிழர் தள(ர்)பதி ஜே. ஆரை ஆசியாவின் சிறந்த ஜனநாயகவாதி என அபாண்டமாக புழுகி அனைத்துத் தமிழ் மக்களையும் தலைகுனியச் செய்தார். இவ்வாறான இவர்களது (கூட்டணியினரின்) நடைமுறைகளை நோக்கும் பொழுது இவர்களுக்கு தனிநாடு என்பது ஒருதேர்தல் கோஷமே தவிர கொள்கை அல்ல என்பது தெளிவாகின்றது. எப்படிப்பார்க்கிலும் தமிழர் விடுதலை கூட்டணி யு. என். பி அரசை தனது கள்ளக் கூட்டணியாகவே வைத்துள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தொடர்ச்சியான காட்டிக் கொடுப்புகளினால் அதிருப்தியுற்ற தீவிர உணர்வுள்ள தமிழ் இளைஞர்கள் தனிநபர் பயங்கரவாதத்தை தமிழ் ஈழத்தின் விடுதலைப் பாதையாகக் கொண்டனர். ஆரம்பத்தில் இப்பயங்கரவாதத்தை தாமும் ஆதரிப்பதுபோல் த. வி. கூ யினர் காட்டிக் கொண்டனர். நாளடைவில் இளைஞர்களின் தீவிரம் சொகுசான இவர்களது வாழ்க்கைக்கு இடையூறுகளையும் அச்சுறுத்தல்களையும் கொண்டதாக வளரவே, த. வி. கூட்டணியினர் காட்டிக்கொடுப்பில் மிகத்தந்திரமாக இறங்கிச் செயல்பட்டனர். தனிநபர் பயங்கரவாதம் கொள்கை ரீதியாக தவறானது. இதனால் விடுதலையை பெறமுடியாததுடன், அரசை மேலும் மேலும் பலப்படுத்தவே துணைசெய்யும். தனிநபர் பயங்கரவாதத்தைச் சொல்லி அரசு பயங்கரவாத சட்டங்களை கொண்டு வந்ததையும் ராணுவ பயங்கரவாதத்தை மக்கள் மீது கட்ட

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விழ்த்து விடுவதையும் வன்மையாக கண்டிக்கிறோம். சென்ற வருடம் யாழ்ப்பாணத்திற்கு விசேஷ சட்டம் கொண்டு வரப்பட்டு இராணுவ பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டு தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இத்தருணத்தில் அரசின் இக் கொடூரச் செயலுக்கு எதிராக எதையும் செய்யாது தமிழ் தலைமை செயலற்று இருந்தது. தமிழ் இளைஞர்களின் நடவடிக்கைகள் அரசினால் 'கட்டுப் பாட்டிற்குள்' கொண்டு வரப்படுவதை இவர்கள் மறைமுகமாக ஆதரித்தனர். தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாக்க திறனற்ற இத்தலைமை ஆவணிக் கலவரத்தால் வடக்குக் கிழக்கு குடிபெயர்ந்த அகதிகளை பாதுகாக்க திராணியற்றும் உள்ளது. இந்த இலட்சணத்தில்தான் இவர்கள் ஜனாதிபதியின் அதிகாரங்களை பிரயோகிக்கும் சுய அதிகாரமற்ற மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு பெரும் ஆரவாரங்களுடன் கரங்களை உயர்த்தி ஆதரவு தெரிவித்துள்ளனர். மாவட்ட அபிவிருத்தி சபைகளை ஏற்றுக் கொண்டதன் மூலம் உலக அரங்கில் அரசின் தவறான பிரசாரத்திற்கு வழிகோலியுள்ளனர். த. வி கூட்டணியினர் இதனை ஆதரித்ததன் மூலம் நாடெங்கிலும் உள்ள மக்களின் ஜனநாயக உரிமைகளை பறிக்கும் நடவடிக்கைக்கும் துணை போயுள்ளனர். த. வி கூட்டணியின் இந்நடவடிக்கைகளால் தமிழ் பேசும் மக்கள் விரக்தியுற்று, நம்பிக்கையிழந்து, செயலிழந்து போய் உள்ளனர். அரசு மேலும் மேலும் பிரதேச பறிப்பு, இராணுவக்குவிப்பு என்பவைகளை தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக சூட்சுமமாகச் செயற்படுத்தி வருகிறது. தமது சுகபோகங்களை சிறிதேனும் இழக்கத் தயாரில்லாது பெரும் எஜமானர்களின் நல அடிப்படையில் தொடர்ந்து செயற்பட்டு வரும் இன்றைய தமிழ் தலைமையால் தமிழ் பேசும் மக்களுக்காக எதுவும் செய்ய முடியாது என்பது வெளிப்படை. தமிழ் பேசும் மக்களின் விரக்தி நிலையை மாற்றி, உண்மை நிலைகளை உணரச் செய்து, தமது சொந்தப் பலத்தில் நம்பிக்கை வைத்து போராடச் செய்யும் புது வழி ஒன்றில் அவர்களை வழி நடத்திச் செல்வதே இன்றைய தேவையாகும்.

## மக்கள் போராட்டத்தின் அவசியம்

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் இன்றைய நவகாலனித்துவ அரசுக்கு எதிராக அவநம்பிக்கையும் வெறுப்பும் பெருமளவு வளர்ந்துள்ளன. எனினும் அவை நம்பிக்கையான எதிர்காலத்தை நோக்கிய மக்கள் போராட்டங்களாக வளர்த்தெடுக்கப் படவில்லை. பொதுமக்களை செயற்படுத்தாத போராட்ட முறைகளே இதுவரை கடைப்பிடிக்கப் பட்டு வந்துள்ளன. உயர்மட்ட பேச்சு வார்த்தைகள், பேரம் பேசுதல், தனிப்பட்ட செல்வாக்கு பிரயோகங்கள், வெறும் சொல்லடுக்கு ஒப்பாரிகள், நாசூக்காக தழுவிச் செல்லும் பிரார்த்தனைகள் போன்றவையே கௌரவமான போராட்ட முறைகளாக மக்கள் முன் காட்டப்பட்டன. தலைவர்கள் இதனைச் செய்ய வழக்கறிஞனிடம் வழக்கை ஒப்படைத்த கட்சிக்காரன் போன்றே மக்கள் வைக்கப்பட்டனர். இதையே தலைவர்கள் விரும்புகின்றனர். இதனை யாராவது மீறினால் (சுயமாக சிந்தித்தல்) அவர்கள் தமிழ் இனத்தை பிளவு படுத்துகின்றார்கள் என்ற கூப்பாடு போடப்படுகிறது. விடுதலைப் போராட்டம் ஒன்றை நோக்கி மக்கள் அலை அலையாக முன்னேறும், போராட்ட மாதிரி புறக்கணிக்கப்பட்டு வாக்குச் சீட்டில் புள்ளடி இடுவதுடன் மக்கள் மட்டுப் படுத்தப் படுகின்றனர். அரசியலானது தலைவர்களின் குத்தகையாக்கப் பட்டுள்ளது. இது மக்களை செயலற்றவர்களாக்கி விரக்தி நிலைக்கே தள்ளிச் சென்றுள்ளது.

கடந்த காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட இந்த அரசியல் வேலைப்பாணி உணர்ச்சிமிக்க இளைஞர் பகுதியை தனிநபர் பயங்கர வாதத்தின் பக்கம் சாரச் செய்தது. இந்த இளைஞர்கள் தமது தனிநபர் பயங்கர வாதத்தின் மூலம் தமது இலக்கை அடைய விரும்பினர். மக்களின் உணர்வு பூர்வமிக்க அரசியல் நடவடிக்கைகளை வெளிக்கொணர்வதில் நம்பிக்கை வையாத இந்த இளைஞர்கள் அடிப்படையான மாபெரும் சித்தாந்த தவறை இழைத்தனர். சரித்திரத்தை உருவாக்குபவர்கள் மக்கள் என்பதில் இருந்து தூரவிலகி ஒரு சில வீரப்புருஷர்கள் சரித்திரத்தை ஆக்க முடியும் என்று நம்பினர். எந்த மக்களின் விடுதலையை நேர்க்காய் கொண்டு இந்த இளைஞர்கள் செயற்பட்டனரோ அந்த மக்களிடம் இருந்து பிரிந்து நிற்கும் குழுவினராக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவர்கள் தனிமைப்பட்டனர். இவர்களின் நடவடிக்கைகளைச் சாட்டாக கொண்டு அரசு தனது இராணுவ ஒடுக்கு முறைகளை மேலும் மேலும் வடக்குக் கிழக்கில் அதிகரித்தது. மக்கள் தயாரற்ற நிலையில் செய்யும் பயங்கரவாத நடவடிக்கைகள் எதிரியை உஷார் படுத்தவே உதவும் என்ற உலக அனுபவம் வடக்கிலும் கிழக்கிலும் நிரூபிக்கப்பட்டது. மக்களுக்குப் பகிரங்கமாகவும் எதிரிக்கு இரகசியமாகவும் இயங்கவேண்டிய இவர்கள் எதிரிக்கு பகிரங்கமாகவும் மக்களுக்கு இரகசிமாகவும் இருந்தார்கள். இதனாலேயே இவ் இளைஞர் இயக்கங்கள் வட பகுதியில் அவசரகாலச்சட்டம் போட்டவுடன் முகம் கொடுக்க முடியாது பின்வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டன. இந்த அனுபவங்கள் இவர்களில் கணிசமான பகுதியினரை விழிப்படைய வைத்துள்ளது. ஆயினும் தமது கடந்தகால நடைமுறையின் காரணமாய் மக்களிடம் செல்வதில் இவர்கள் சில இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இவ்விடர்பாடுகள் இந்த இளைஞர்களின் ஒரு பகுதியை (சிறு முதலாளி வர்க்க சிந்தனை முனைப்பு கூடிய பிரிவினர்) மீண்டும் தனிநபர் பயங்கர வாதத்தின் பக்கம் செல்ல வைப்பதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு. நாட்டில் வளர்ந்துவரும் நெருக்கடிகள் மக்கள் இயக்கம் வளராவிடின் அராஜகப் போக்கை உருவாக்கும். மக்கள் போராட்ட எழுச்சி ஒன்றே இவ்வாறான தனிநபர் பயங்கரவாத போக்குகளை முற்றாக ஒழித்துக்கட்டும்.

சிலர் தமிழ் மக்களின் விடுதலைக்கு சுயசார்பு என்பதை விட அந்நிய உதவிகளில் தங்கி நிற்றல் என்பதில் அதிக நம்பிக்கை கொள்ள முயல்கின்றனர். இன்றைய உலக நிலவரங்களை எடுத்து நோக்கில் உலக மக்கள் ஆயினும் சரி மக்கள் எதிரிகள் ஆயினும் சரி தனித்தனியாக இல்லை என்பது உண்மையே. உலகில் மக்கள் சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும் போராடும் அதே வேளையில் மக்களின் எதிரிகளான ஏகாதிபத்திய வல்லரசுகள் தமக்குள் மரணப் போட்டியுடன் மக்களை நசுக்கவும் ஒடுக்கவும் முயல்கின்றனர். பலவீனமான நாடுகளில் நிலவும் அரசியல் குழப்பங்களைக் காரணமாகக் கொண்டே இந்த ஏகாதிபத்திய வல்லரசுகள் அந்நிய நாடுகளுக்குள் தலையிட்டு அவைகளை தமது நேரடியான அல்லது மறைமுகமான காலனியாக்குகின்றனர். இத்தகைய வல்லரசுகளின் கையிலேயே ஆயுதப் பொருளாதார பலம் உண்டு. எனவே அந்நிய உதவி என்ற பெயரில் இந்த ஏகாதிபத்தியங்கள் இலங்கைக்குள் உட்புகுவதற்கு தமிழ் பேசும் மக்கள் போராட்டம் கருவியாகி விடலாம் என்பதனாலேயே நாம் சுயசார்பை வலியுறுத்துகின்றோம். நாம் எமது சொந்தக்காலில் நிற்போம். அத்தகைய நிற்றலை நாம் ஸ்திரப்படுத்திக் கொண்டோமானால் கிடைக்கக்கூடிய உண்மையான அந்நிய உதவிகள் மேலும் எமது சுயசார்பை பலப்படுத்தும். அவ்வாறு இல்லாது அந்நிய உதவியில் நிற்போமானால் ஈற்றில் அந்நிய ஏஜமானால் ஆட்டுவிக்கும் பொம்மையாக நாம் மாற நேரலாம். 'அந்நிய உதவி' என்பதால் ஏற்படும் பிரச்சினைகளை எரிட்ரியாவின் விடுதலைப் போராட்டம் நமக்கு படிப்பினைகளாகத் தந்துள்ளது.



அப்புக்காத்து அரசியல் தலைமை, தனிநபர் பயங்கரவாதம், அந்நிய உதவியில் நிற்றல் என்கின்ற மாயைகள் தமிழ் பேசும் மக்களின் போராட்டத்திற்கு உதவ முடியாதவைகள். பொதுமக்களை அணி அணியாகத்திரட்டி அவர்களை அரசியல் மயப்படுத்தி புரட்சிகர பலாத்காரம் கொண்டு நடாத்தப்படும் மக்கள் யுத்தமெனும் நடைமுறையே தமிழ் பேசும் மக்கள்முன் உள்ள சரியான வழியாகும்.

* * *

## மக்கள் இயக்கமொன்றின் வரலாற்றுத்தேவை.

ஒடுக்கு முறைக்குள்ளாக்கப் பட்டிருக்கும் தமிழ் பேசும் மக்கள் தமது சொந்தப் பலத்தில் நம்பிக்கை வைத்து தமது உரிமைகளுக்காகப் போராடுவதையே நாம் வேண்டி நிற்கிறோம். இன்றைய அரசியற் போக்கு அத்தகைய போராட்டங்களைத் தவிர்க்க முடியாதபடி உருவாக்கியே தீரும்.

இன்றைய இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள அரசியல் இயக்கங்களை நோக்கின் அவைகளை இரு கூறுகளாக பிரிக்கலாம்.

1: தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளை அரசியல் லாபம் கருதிகையாள்பவர்கள். இவர்கள் பிற்போக்கு வாதிகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



2. தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காய் நேர்மையுடன் உழைத்துக் கொண்டிருக்கும் குழுக்கள் இவர்கள் முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள்.

தமிழ் பேசும் மக்களுக்கு முன்னைய வகையினரே இது வரை தலைமை தாங்கி வந்துள்ளனர். இவர்களின் தலைமை தமிழ் பேசும் மக்களை எவ்வாறு வழி நடத்தின என்பது முன்னரே கூறப்பட்டது. இரண்டாம் வகையினரைப் பொறுத்தவரை இவர்களில் யாரும் தமிழ் பேசும் மக்களின் பொதுவாழ்வை தீர்மானிக்கும் ஸ்தாபனபலம் அற்றவர்கள் இவர்களை இட்டு மக்களின் கவன ஈர்ப்பும் மிகக்குறைவு. அரசியலுக்கு இவர்களின் அண்மைக்கால வரவும், இவர்கள் பின்பற்றிய நடைமுறைகளும் இதற்குக்காரணமாகவுள்ளது.

மாபுவழி பிற்போக்குத் தமிழ்த் தலைமையும் புதிய முற்போக்கு அரசியல் குழுக்களின் பலவீனமும் தமிழ் பேசும் மக்களின் அரசியல் தலைமையை வெற்றிடமாக்கி வைத்துள்ளது. இத்தகைய ஒருவரலாற்றுச் சூழலில்தான் தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்காக அவர்களைக் கட்டி எழுப்பி ஐக்கியப்படுத்தி தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கடமையை நாம் எதிர் கொள்கிறோம் இந்தக் கடமையை நாம் வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமெனின் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்படல் மிக அவசியம்.

1. ஒவ்வொரு அரசியல் குழுவும் தனது அரசியல் மார்க்கத்தை திட்டவட்டமாக வகுத்து மக்கள்முன் வைக்க வேண்டும்.

2. ஒரே கொள்கை அடிப்படை கொண்ட குழுக்கள் கொள்கை அடிப்படையில் இணையத் தயாராதல் வேண்டும்.

3. சகல நேர்மையான குழுக்களுக்கிடையேயும் ஓர் பொதுவான உடன்பாடு ஏற்படுதல் அவசியம்.

4. சகல கிராமங்கள் தோறும். நகரங்கள் தோறும் மக்கள் ஸ்தாபனமயப் படுத்தப்படல் வேண்டும்.

இங்கு கூறப்பட்டுள்ள நான்கு நிபந்தனைகளில் முதல் மூன்று நிபந்தனை நிறைவேறுவதில் உள்ள சாத்தியப் பாட்டிலேயே



நான்காவது நிபந்தனையின் வெற்றி தங்கியுள்ளது என நாம் கருதுகின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டப் பாதையில் ''சகல முற்போக்கு ஜனநாயக சக்திகளையும் ஒரு பொது உடன்பாட்டின் கீழ் ஐக்கியப்படுத்தலும் மக்கள் இயக்கம் ஒன்றை எழுச்சியுறச் செய்வதும்'' என்ற வரலாற்றுத் தேவையை நிறைவு செய்யும் பணியையே தனது இலக்காகக் கொண்டு எமது முன்னணி உழைத்திட திடம் கொண்டுள்ளது. குழுவாதம், விடுதலைப் போராட்டத்தை குத்தகை எடுத்த மனப்பான்மை என்பன தமிழ் பேசும் மக்களுக்கு தீமையையே தரும். நாம் விரும்பும் இலக்கை உதிரிகளாய் நின்று பிரசங்கம் செய்வதால் அடைய முடியாது என்பதை அனுபவம் காட்டியுள்ளது. எமக்கு இக்காரியத்தை நிறைவேற்றுவதற்கு இரண்டு ஆயுதங்கள் தேவைப்படுகின்றன. ஒன்று சரியான சித்தாந்த மார்க்கம் இரண்டு உறுதியான ஸ்தாபனம். இந்த இரண்டு ஆயுதங்களும் இன்றி நாம் எதிர்பார்க்கும் இலக்கை அடைதல் இயலாது. எனவேதான் நாம் எமக்கென ஒரு அரசியல் மார்க்கத்தையும் ஸ்தாபன மார்க்கத்தையும் வகுத்துள்ளோம். தமிழ் பேசும் மக்களின் விடுதலையானது எமது முன்னணியின் வேலை மட்டும் என்றோ அல்லது தமிழ் பேசும் மக்களுக்கு விடுதலை வாங்கி கொடுக்க அவதரித்த இரட்சகர்கள் என்றோ நாம் எம்மைக் கருதவில்லை. 'மக்கள் எழுச்சிக்கு புரட்சிகரமான தலைமை ஒன்றை உருவாக்கவுமான' பணியில் எமது பங்கை செலுத்த முன் வந்துள்ளோம். வரலாறானது உண்மையான புரட்சிகரமான தலைமையொன்றைத் தமிழ் பேசும் மக்களுக்கு அளித்தே தீரும். நிச்சயமாக இத்தகைய நிலைமை மக்கள் எழுச்சியொன்றின் ஊடாகவே நிறைவேறும். அத்தகைய மக்கள் எழுச்சிக்காக மக்கள் இயக்கத்துக்காக எமது முன்னணி உழைக்கும்.

## எமது கொள்கையும் தீர்வும்

பல தேசிய இனங்கள் வாழுகின்ற நாடுகளில் தேசிய இனப் பிரச்சனையானது ''சுயநிர்ணய உரிமை'' என்பதன் அடிப்படையில் மட்டுமே தீர்க்கப்படமுடியும் சுயநிர்ணய உரிமை என்பது 'ஒரு தேசிய இனம் பிரிந்துபோகும் உரிமையுடன் கூடிய தனது தலைவிதியைத்தானே நிர்ணயிக்கும் உரிமை., பிறதேசிய இனங்களை ஒடுக்கும் எந்தவொரு தேசிய இனமும் சுதந்திரமாக இருக்கமுடியாது என்ற நிதர்சனமான உண்மையைப் புரிந்து கொண்டு சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் ஒவ்வொருவரும் மற்ற

www.tamilarangam.net



வரது சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் மதித்து நடக்கும் சமூக அமைப்பையே வேண்டி நிற்கிறோம். இதனை சமத்துவ சமூக அமைப்பை உருவாக்கிக் கொண்ட நாடுகளின் வரலாறு நிரூபித்துக் காட்டியுள்ளது. தேசிய இனங்களின் சுதந்திரத்தைப் பேணுவதோடு மட்டுமன்றி, தமக்கென எழுத்துருவம் இல்லாத மொழிகளை வழங்கும் மக்கள் பகுதியினரைக்கூட "தேசிய இனங்களாக" வளர்த்தெடுக்கும் சீரிய பணியினையும் சமத்துவ சமூக அமைப்புள்ள நாடுகளில் கண்டிருக்கிறோம். சகல விதமான அடிமைத்தளைகளிலிருந்தும் மனிதகுலத்தை விடுவிக்கும் விடுதலை வீச்சினைக் கொண்ட சமத்துவ சமூக அமைப்பு மட்டுமே இனவாதத்தையும் அடியோடு இல்லா தொழிக்கும் என்பதை நாம் திடமாக வலியுறுத்துகிறோம்.

இங்கு எமது கொள்கை என்று கூறும்பொழுது தமிழ் பேசும் மக்கள் மீதான இன ஒடுக்க முறையில் இருந்து மீள்வதற்கான தீர்வையே குறிக்கின்றோம் தீர்வு எதுவாக இருக்க வேண்டும் என்பதை தெளிவாக்கி கொள்ளுமுன் எமது தீர்வுகளுக்கான தேவை எது என்று காணல் அவசியம். இலங்கையின் நம்மையாளும் நவகாலனித்துவ அரசு தமிழ் பேசும் மக்கள் மீது பின்வரும் வடிவங்களில் இன ஒடுக்கு முறையை தொடருகிறது.

1. தமிழ் மொழிக்கு சமத்துவமான உரிமையும், தனிவாழ்விலும் பொது வாழ்விலும் தமிழை பிரயோகிப்பதற்கு பூரணசுதந்திரமும், உத்தரவாதமும் வழங்கப்படாமை.
2. தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் சிங்களக் குடியேற்றம் மூலம் பறிக்கப்படுதலும் தனித்துவம் அழிக்கப்படுதலும்.
3. கல்வி, வேலை வாய்ப்பில் இனரீதியான பாரபட்சம்.
4. தமிழ் பிரதேசங்கள் பொருளாதார ரீதியாக புறக்கணிக்கப்படல்.
5. வடக்குக் கிழக்குத் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்களின் உயிர், உடமை என்பவற்றிற்கு உத்தரவாதமின்மை.
6. இராணுவ அடக்குமுறை காடைத்தனம் ஆகியவற்றால் பாதிக்கப்படல்.

இங்கு நாம் கூறிய வடிவங்களில் தமிழ் மக்கள் மீதான ஒடுக்குமுறை தொடர்ந்து வந்த அரசுகளால் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்துள்ளது. இலங்கையின் தொடர்ந்துவந்த அரசுகள் தமது இருத்தலுக்கு இனவாதத்தைக் கருவியாகப் பாவித்தே வந்துள்ளன. தமிழ் பேசும் மக்கள் பல கோரிக்கைகளை முன்வைத்தே வந்துள்ளனர் ஐம்பதுக்கு ஐம்பது, சமஷ்டி, பண்டா



செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் போன்றவற்றை காலத்திற்குக் காலம் முன்வைத்தனர். ஒப்பந்தங்கள் யாவும் கிழித்தெறியப்பட்டன. இன்றைய அரசு பெயரளவில் தமிழ்மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதாக சொன்னாலும் இனஒடுக்குமுறை தொடர்ந்து இருக்கும் என்பதில் இந்த அரசின் இயலாமையை விளங்கிக் கொண்டோர்க்கு ஐயமிருக்காது. தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட்ட அரசுகளின் நடவடிக்கைகள் வெறுப்பும், கொதிப்பும் அடைந்த தமிழ் பேசும் மக்களை தமது விடுதலைக்கான மார்க்கம் தனிநாடுதான் எனும் நிலைக்குத் தள்ளியது.

இங்கு நாம் பிரிவினை சரியானதா தவறானதா எனும் விவாதத்தை மொட்டையாக நடத்தமுடியாது. இப்பிரச்சினை ஒரு சமூகவியல் பிரச்சினை. இப்பிரச்சினையின் வளர்ச்சியும் மாற்றங்களும் பல்வேறு காரணிகளால் தீர்மானிக்கப் படுகிறது. சூழ்நிலைகள் மாறும் பொழுது பிரச்சினையின் தன்மையும் மாற்றமடையும். எனவே கணிப்புகளும், கருத்துகளும் மாற்றமடையும். இந்த அடிப்படையில்தான் பிரிவினையையும் நாம் அணுகவேண்டும். மனவிருப்பத்தின் அடிப்படையிலோ அல்லது இலட்சிய வேட்கையின் அடிப்படையிலோ பார்த்தல் சரியான பார்வையாகாது. பிரிவினை கோரிக்கையில் சராம்சத்தை நாம் புரிந்துகொள்வது அவசியம். இதன் வரலாற்றுப் பின்னணி, சுற்றுச்சார்பு, களம், காலம் என்பவற்றின் அடிப்படையிலேயே எமது முன்னணி பிரிவினைக் கோரிக்கையை அணுகுகின்றது.

பிரிவினைக் கோரிக்கை மூலம் இந்த நவகாலனித்துவ அரசின்கீழ் சுதந்திரமான வாழ்வு இல்லை என்ற உண்மையை வடகிழக்கு தமிழ் மக்கள் தெளிவாக்கி உள்ளனர். நாமும் மக்கள் வெளிப்படுத்தியுள்ள இந்த உண்மையை வலுவாகப் பற்றிக் கொள்கிறோம். இலங்கையின் இன்றைய இனவெறி அரசானது தமிழ்பேசும் மக்களை மட்டும் ஒடுக்கவில்லை. இது அப்பாவிச்சிங்கள மக்கள் மீதும் தனது கொடுங்கோலாட்சியைச் செலுத்துகின்றது விலைவாசியுயர்வு, வேலையில்லாத்திண்டாட்டம் ஊழல் சுரண்டல், பெண்ணடிமைமுறை, கிராமங்களைப் புறக்கணித்தல் கீழ்த்தட்டு மக்களின் உரிமை மறுப்பு, அதிகார துஷ்பிரயோகம் இந்தப் பிரச்சினைகளால் சாதாரண நாட்டு மக்கள் சகலரும் துன்புறுகின்றனர். இவைகளைவிட தமிழ்பேசும் மக்கள் மீது மேலதிகமான ஒரு விலங்குண்டு அதுதான் இனஅடிமை விலங்கு. சாதாரண சிங்கள மகனுக்கும். தமிழ் மகனுக்கும் பொதுவான பல விலங்குகளை இந்த அரசு போட்டுள்ளது இந்த பொதுவான விலங்குகளை உடைத்தெறிய தமிழனும் சிங்களவனும் சேராது தடுப்பதில் இனவாதத்தை அரசு பயன்படுத்திக் கொள்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தரப்படுத்தல், வேலைவாய்ப்பு பிரதேசப்பறிமுதல் என்பவைகளின் மூலம் முறையே மாணவர், உழைப்பாளர், விவசாயிகள் இடையே அரசு பிளவை உருவாக்கியுள்ளது. தமிழ்பேசும் மக்கள் மத்தியில் குறுகிய இனவாதம் கொண்ட தமிழ் பிற்போக்கு தலைமைகள் சிங்கள இனவெறிக்கு மேலும் அடியெடுத்துக் கொடுக்கும் வேலைகளையே செய்தனர். சிங்கள மக்களோ அரசின் இனவாதத்தில் மயங்கினர். தமிழ்பேசும் மக்களை கொல்லவும் கொடுமை செய்யவும் துணிந்தனர். தம்மீதான ஆளும் எஜமானர்களால் இடப்பட்ட விலங்கை உடைக்கவேண்டிய சிங்கள மக்கள் இனவெறியை ஆயுதமாய் கொண்டு தமிழ்மக்களைத் தாக்கினர். இதன்மூலம் எஜமானர்களின் விலங்கை தாமே மேலும் இறுக்கிக் கொண்டனர். பிறிதொரு இனத்தை ஒடுக்கும் ஒரு இனம் சுதந்திரமானதாக இருக்க இயலாது என்ற நிதர்சன உண்மைக்கு இவர்கள் உதாரணம் ஆயினர். தேசப்பரந்த உழைப்பாளிகளின் ஐக்கியம் என்பது தற்காலிக தோல்வியைத் தழுவியது வடக்குக் கிழக்குத் தமிழ்மக்கள் தம்பாதையில் முன்னேறத்துணிந்தனர்.

தமிழ் பேசும் மக்களுடன் இணைந்து போராடியிருக்க வேண்டிய சிங்கள மக்கள் ஒன்றில் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக போராட தயாராகுகின்றனர் அல்லது தமிழ்பேசும் மக்களின் பிரச்சினையை உதாசீனம் செய்கின்றனர். இந்த நிலையில் சிங்கள மக்களுடன் இணைந்து நவகாலனித்துவ அரசை தூக்கி வீசிவிட்டு சகல மக்களுக்கும் சமத்துவமான ஓர் 'ஐக்கிய இலங்கை என்ற போராட்டத்துக்கான வாய்ப்பு தமிழ் மக்கள் முன் அற்றுப்போய் உள்ளது. இப்படியான போராட்டம் ஏற்படும் வரை தமிழ் மக்கள் காத்திருக்க வேண்டுமா? தமிழ் பேசும் மக்கள் காத்திருக்க முடியாது. அவர்கள் தமது ஜனநாயக உரிமைகளுக்காகவும் பாரம்பரிய பிரதேசங்களைப் பாதுகாக்கவுமான போராட்டங்களை முன்னெடுப்பது அவசியம். உண்மையான சமதர்ம கொள்கையை ஏற்றுள்ள எந்த சிங்கள மக்களின் உள்ள நபரும் தமிழ் பேசும் மக்களின் இப்போராட்டத்தை ஆதரிப்பது மட்டுமன்றி முன்னெடுக்கவும் வேண்டும். அப்படி செய்யாதவர் உண்மையான சமதர்மவாதியாக இருக்கவும் முடியாது.

இந்த அரசிற்கும் மொத்தநாட்டு மக்களுக்கு மிடையில் முரண்பாடு உண்டு மற்றது அரசிற்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் முரண்பாடு உண்டு. முரண்பாடுகளின் சமச்சீரற்ற வளர்ச்சி எனும் அடிப்படையில் பார்க்கும்போது பிரச்சினை ஏற்றத்தாழ்வான வளர்ச்சியை உடையது. அரசுக்கும் வடகிழக்கு மக்களுக்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைந்து வருகின்றது. அரசின் இராணுவக் குவிப்பிலிருந்து இதனை புரிந்து கொள்ள



லாம். அணைக்கட்டில் பலவீனமான இடத்திலேயே முதல் வெடிப்பு நிகழும் அந்த வெடிப்பே முழு அணைக்கட்டும் அழிந்தொழிவதற்கான அடிப்படையாகும். ஆம்! இந்த உடைப்பு நவகாலனித்துவ அரசின் அழிவிற்கான தொடக்கம். தமிழ் பேசும் மக்களின் விடுதலையை நோக்கிய போராட்டம் சிங்கள மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஊக்குவிக்கும். இதில் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதோடு உறுதுணையாகவும் இருக்கும். இதனை நாம் சரியாக புரிந்து போராட்டத்தை முன்னெடுப்பதன் மூலம் எமது இலக்கை அடைய முடியும்.

மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப எமது போராட்டத் தந்திரோபாயமும் மாற்றப்படவேண்டும் என்பது தெளிவானது. நவகாலனித்துவ அரசைத் தகர்த்தெறிந்து சமத்துவ சமூகத்தை உருவாக்குவதற்கான போராட்டம் முன்செல்லுமாயின் தமிழ் பேசும் மக்களும் தமது போராட்டத்தை அப்போராட்டத்தின் பகுதியாக ஆக்கிக்கொள்வதோடு ஒன்றிணைந்த கரங்கள் மூலம் அரசைத் தூக்கியெறிதல்வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்ட பொதுப் புரட்சியானது சிறுபான்மை இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் மூலமே அவர்களின் தேவைகளையும், கோரிக்கைகளையும் நிறைவேற்ற முடியும். பின்வரும் கோரிக்கைகள் உத்தரவாதப் படுத்தப்படல் வேண்டும்.

1. தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் பாதுகாக்கப்படலும் திட்டமிட்ட சிங்களக்குடியேற்றத்தை நிறுத்தலும்
2. தமிழ் மொழிக்குரிய அந்தஸ்த்து வழங்கப்படல் வேண்டும்.
3. தமிழ் பேசும் மக்களின் பிரதேசங்களில் பூரண சுதந்திர வாழ்வும், அவர்களது பாரம்பரிய பிரதேசங்களில் பொருளாதார திட்டமிடல் உட்பட அரசியல் சுய நிர்வாக உரிமை மத்திய அரசை நிர்வாகிப்பதில் உரிய பிரதிநிதித்துவமும் உரிமையும்.
4. தமிழ் பேசும் மக்களின் கலாச்சாரம் மற்றும் தனித்துவங்கள் பாதுகாக்கப்படல்.
5. தமது பிரதேசத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை தாமே தீர்மானிக்கும் உரிமையும் பிரிந்துபோகும் உரிமையும்.

இவ்வடிப்படையில் ஒரு பொதுப்போராட்ட இயக்கம் திட்டங்களை வகுக்கும் பட்சத்தில் தமிழ்பேசும் மக்கள் ஐக்கியப்பட்ட போராட்டத்தில் இணைவதில் எதுவித பிரச்சினையும் இருக்காது. அப்படியில்லாத பட்சத்தில் தமிழ் பேசும் மக்கள் தமது வழியைப் பார்த்துக் கொள்வதைத் தவிர வேறுமார்க்கம் கிடையாது. இன்று ஒரு பொதுப் போராட்டத்தை முன்னெடுக்குமளவிற்கு சிங்கள மக்கள் மத்தியில் சரியான இயக்கம் பலமாகவில்லை. இந்நிலையில் தமிழ் பேசும் மக்கள் தமது விடுதலைக்

www.tamilarangam.net



கான போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறு மார்க்கம் கிடையாது. இங்கு பொதுப் புரட்சியாயினும்சரி தனியான போராட்டமாயினும்சரி சிறுபான்மையினங்கள் சொந்த பாதுகாப்பிற்கு தமது சொந்தப்பலத்தில் தங்கிநிற்கக்கூடிய கொள்கைகளும் செயற்திட்டங்களும் அவசியம். தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போராட்டம் வெற்றிபெறும் பட்சத்தில் விடுதலையான தமிழ் பிரதேசம் சிங்கள மக்களின் விடுதலைப் போராட்டத்தில் தளமாகவோ அல்லது பின்னணி பிரதேசமாகவோ பயன்படுத்தப்படுவது தவிர்க்க முடியாததும் அத்தியாவசியமானதும் கூட. தமிழ் பேசும் மக்களின் விடுதலைப்போராட்டத் தலைமை சாதாரண தமிழ்மக்களின் தலைமையாயிருப்பது மிக மிக அவசியம். அவ்வாறில்லையாயின் நாம் திரும்பவும் புதிய எஜமானர்களை உருவாக்கியவர்களாவோம். இதற்கு பங்களாதேஷ் சம்பவங்கள் சிறந்த படிப்பினையாகும். நாம் விரும்புவது சகல அடிமைத்தளைகளிலிருந்தும் தமிழ்பேசும் மக்களை விடுதலை செய்வதையேயாகும்.

தமிழ்பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் பிரதானமாக வடக்குக் கிழக்குத் தமிழ்மக்களின் பிரச்சினையின் அடிப்படையில் கொள்கையையும் தீர்வையும் விளக்குகிறோம். முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் பற்றிய எமது கொள்கையை இனி பார்ப்போம்.

முஸ்லிம்கள் தமது இறுக்கமான மத அமைப்பாலும், பண்பாட்டாலும் ஏனைய தமிழ்பேசும் மக்களில் இருந்து வேறுபட்ட ஓர் பிரிவினராகும். இவர்கள் இலங்கையின் கிழக்குப் பகுதியில் செறிவாகவும் நாடு பரந்து சிதறியும் வாழ்கின்றனர். ஒருகாலத்தில் இவர்களின் தாய்மொழி தொடர்பாய் மாறுபட்ட அபிப்பிராயங்கள் நிலவின. இன்றே தமிழ்தான் இவர்களின் தாய்மொழி என்பது தெளிவாகிவிட்டது. முன்பு சிங்களம்தான் தாய்மொழி என்று இயக்கம் நடத்திய தலைவர்கள்கூட தமிழ்தான் தாய்மொழி என்று சொல்லுமளவிற்கு வந்துவிட்டார்கள். முஸ்லீம்கள் என்ற தனித்துவமான விழிப்பு மிக அண்மைக்காலமாகத்தான் இவர்கள் மத்தியில் தோன்றி வேரூன்றி வருகிறது. ஆரம்பகாலத்தில் பெரும்பான்மையாக வர்த்தகர்களாகவேயிருந்தனர். இன்று விவசாயம், மீன்பிடி, கைத்தொழில் அரசாங்க உத்தியோகம் என்பவற்றில் ஈடுபாடு கொண்டோராய் மாற்றமுற்றுள்ளனர். இந்த வாழ்நிலை மாற்றம் காரணமாகவே இவர்கள் மத்தியில் முஸ்லிம் தேசியவாதம் உருப்பெறத் தொடங்கியுள்ளது. இந்த விழிப்பானது எதிர்காலத்தில் இவர்களைச் சிங்களப் பெருந்தேசிய வாதத்திற்கெதிராக கிளர்ந்தெழச்செய்யும், இன்றைய அரசும் பௌத்தநிறுவனங்களும் முஸ்லிம் விரோத நடவடிக்கையை மேற்கொள்கின்றன. இன்றைய நிலையில் முஸ்லிம்களின் விழிப்பு மந்தமான



நிலையிலேயே செல்கின்றது. முஸ்லிம்மக்களை தலைமை தாங்குபவர்கள் பெரும் வர்த்தகர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களே இவர்களின் சந்தர்ப்பவாத தலைமைகளே இந்த மந்தமான போக்கிற்கு காரணமாகும்.

சிங்கள பெருந்தேசிய வாதத்திற்கெதிரான விழிப்பை இவர்கள் மத்தியில் ஏற்படுத்தவும் இவர்கள்மத்தியில் உள்ள முற்போக்கு அரசியல் சக்திகளை வளர்த்தெடுப்பதிலும் எமது முன்னணி பிரதான கவனத்தை செலுத்தும் கிழக்குப் பிரதேசத்தில் இவர்கள் செறிதாய் வாழும் பகுதிகள் இவர்களுடைய பாரம்பரிய பிரதேசங்கள் ஆகும். இப்பிரதேசங்களைச் சிங்களவர்களோ அல்லது தமிழர்களோ ஆக்கிரமிப்பது தவறானது ஆகும், இத்தகைய நிகழ்ச்சிகள் யாரால் விளைவிக்கப்படினும் எமது முன்னணி அதனை வன்மையாக எதிர்க்கும். தமது எதிர்கால வாழ்வு எவ்வாறு இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கும் சுதந்திரமும் அத்தீர்மானங்களை அமுல்படுத்தும் சுதந்திரமும் இவர்களுக்கு இருத்தல்வேண்டும். இலங்கையின் அரசியலில் எவ்வாறான மாற்றங்கள் (பிரிவினை அல்லது சமதர்ம ஐக்கிய இலங்கை) நிகழ்ந்தாலும் முஸ்லிம் மக்களின் பிரதேச உரிமையையும் அவர்களின் தனித்துவங்களும் காணப்படும் வகையில் நிர்வாக முறைகள் ஏற்படுத்தப்படவேண்டும் என நாம் தீர்மானிக்கிறோம்.

பிரிட்டிசாரால் பெருந்தோட்ட பொருளாதாரம் உருவாக்கப்பட்டபின் இந்தியாவிலிருந்து கூலிகளாய் கொண்டுவரப்பட்டு நவீன அடிமைகளாக மலையக தோட்டங்களில் கட்டிப்போடப்பட்ட மக்களையே மலையக மக்கள் என்கிறோம் பெரும்பான்மையோர் பாட்டாளி வர்க்கத்தினரா்யிருப்பதனால் போராட்டங்களில் முக்கிய பங்கு ஆற்றியிருக்க வேண்டியவர்கள் ஆனால் நகர்ப்புற தொழிலாளர்களுடன் இணைந்து போராட முடியாமல் ஆக்கப்பட்டனர். 1948ம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட ஒரு வஞ்சகமான சட்டத்தின் மூலம் இவர்கள் குடியியல் உரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக்கப்பட்டனர். அன்றில் இருந்து ஏனைய தமிழ்பேசும் மக்களுக்கு இருக்கக்கூடிய அந்தஸ்தும் அற்று வாழ நிர்ப்பந்திக்கப்பட்டனர். தேசிய வாழ்வில் பங்களிப்பை வழங்கமுடியாதவர்களாயினர். நாட்டின் தேசிய வருமானத்தில் பெரும்பங்கை ஈட்டித்தந்தும், மிக மோசமான வாழ்க்கைத் தரத்திலுள்ளனர். வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களை ஒட்டி சில பொது பிரச்சனைகள் இவர்களுக்கு இருப்பினும் தனித்துவமான பல பிரச்சினைகள் உண்டு.

இவர்கள் ஆரம்பத்திலே செறிவாகவே ஒரே பிரதேசத்தில் வாழ்[illegible]னர். இன்று இருவகையினராக இவர்களை பாகுபடுத்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லாம். ஒருபகுதியினர் சிங்கள கிராமங்களின் மத்தியில் சிதறடிக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றனர். இன்னொரு பகுதியினர் ஹட்டன், மஸ்கெலியா தலவாக்கொல்லை, போன்ற பகுதிகளில் செறிவாக வாழ்கின்றனர். நடந்துமுடிந்த 1977 ஆவணி இனக்கொலைகளரியில் ஐதாக வாழ்ந்த மலையகத்தவரே மிகக் கொடூரமாக பாதிக்கப்பட்டனர். தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டபோது தோட்டங்களில் இருந்து கூட்டம் கூட்டமாகவும் தனித்தனியாகவும் பலவந்தமாக மனிதாபமற்ற முறையில் வெளியேற்றப்பட்டனர். பல்வேறு காரணங்களைக்காட்டி தோட்டங்கள் சிங்களவருக்கு பங்கிடப்படுகின்றன. ஒரு நூற்றாண்டிற்கு மேல் தமது வியர்வையால் செப்பனிட்ட நிலம் இன்று இவர்களிடமிருந்து அந்நியமயமாக்கப்பட்டுள்ளது. இனவெறியர்களால் எந்த நிமிடமும் இவர்களின் உயிருக்கு ஆபத்து விளையலாம் என்ற அச்சத்தின் மத்தியிலேயே இவர்களின் அன்றாட வாழ்வு நகருகின்றது. இந்த மக்களின் விருப்பு வெறுப்புகளை கணக்கிலெடுக்காமல் விற்பனைப் பண்டங்கள்போல் செய்யப்பட்ட சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் இவர்களில் ஒரு பகுதியினரை இலங்கைப் பிரஜைகளாகவும் ஒரு பகுதியினரை இந்தியப் பிரஜைகளாகவும் ஆக்கியுள்ளது. மொத்தமாக 6 இலட்சம் பேர் இந்திய பிரஜைகளாகவும் 4 இலட்சம் பேர் இலங்கைப் பிரஜைகளாகவும் ஆகுவார்கள். ஒப்பந்தகால எல்லை நீட்டப்பட்டும் இதுவரைக்கும் 3 இலட்சம் பேர்தான் சென்றுள்ளார்கள். தொடர்ந்து நாடற்றவர்களாகவே இவர்கள் வாழ்கின்றனர். இவர்கள் மத்தியிலிருந்து தாங்கள் தனியான தேசிய இனம் என்ற கோரிக்கை பிறந்துள்ளது. இந்த பின்னணியிலேயே நாம் இவர்களுக்கான தீர்வை முன்வைக்க வேண்டியுள்ளது.

மலையக மக்களை பொறுத்தவரை இவர்கள் வாழ்கின்ற பிரதேசங்களிலேயே அவர்கள் வாழ்வதற்கான பூரண சுதந்திரம் உத்தரவாதப் படுத்தப்படவேண்டும் என்பது எமது கொள்கையாகும். இவ்வாறான ஓர் வாழ்வை கோருவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. நடைமுறையில் சிங்கள இனவெறியர்களோ அதன் அரசோ இதனை கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை. இன்று ஐதாக வாழும் பகுதிகளிலுள்ள கணிசமான மக்கள் வடக்குக்கிழக்கை நோக்கி நகருகின்னர். இவர்கள் அப்படி நகருவது பாதுகாப்பிற்கு அவசியமானது. மலையகத்தில் வாழும் மக்கள் தமது வாழ்வை ஸ்திரப்படுத்த நடத்தக்கூடிய சகல போராட்டங்களுக்கும் நடைமுறைசார்ந்த ஒத்துழைப்பை நல்க நாம் தயாராயுள்ளோம். அவர்கள் தம்மை தற்காத்துக் கொள்ளப் போராடத் தயாராவது அவசியம். அதேவேளை வடகிழக்கிற்கு குடிபெயர்ந்து அவர்கள் வரவிரும்பின் அதற்கும் மதிப்பளித்து வடக்குக் கிழக்



கில் அவர்களின் குடியேற்றல்களுக்காக நாம் பாடுபடுவோம். நாம் மட்டும் அன்றி இத்தகைய குடியேற்றங்களுக்காக உதவும் பொருட்டு தமிழ்பேசும் மக்களின் ஏனைய விடுதலை இயக்கங்களையும் மக்களையும் உற்சாகப்படுத்த நாம் உழைப்போம்.

நாம் இங்கு குறிப்பிட்டுள்ள அடிப்படை நோக்கங்களை பின்வருமாறு அமைத்துக்கொள்கிறோம்.

1. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் தமது மொழியை எதுவித தடையுமின்றி உபயோகிக்கவும் மொழிச் சமத்துவத்தை பூரணமாக அனுபவிக்கவும் உத்தரவாதம் பெறப்போராடுதல்
2. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களை பாதுகாத்தலும் அப்பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை எதிர்த்தலும்.
3. இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் மீதும் அவர்களது பாரம்பரிய பிரதேசங்கள் மீதுமான பொருளாதாரப் புறக்கணிப்பை எதிர்த்தலும் அப்பிரதேசங்களின் சுயசார்பு பொருளாதாரத்திற்காகப் போராடுதலும்.
4. கல்வி வேலை வாய்ப்பில் இனரீதியான பாரபட்சங்களை எதிர்த்தல்.
5. இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் கலாச்சார தனித்துவங்களை பாதுகாத்தல்.
6. தமிழ் பேசும் மக்கள் மீதான இராணுவ ஒடுக்குமுறையிலிருந்து மக்களைப் பாதுகாத்தல்.
7. தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் வந்து குடியேற விரும்பும் மற்றைய பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் மக்களை குடியேற ஊக்குவிக்கலும் உதவுதலும்.
8. இலங்கையிலும் வாழும் தமிழ் பேசும் மக்களின் உயிர், உடைமைகளின் பாதுகாப்பிற்காக போராடுதல்.

தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மையினர் என்றவகையில் அவர்கள் மீது நடத்தப்படும் இனரீதியான ஒடுக்குமுறையை எதிர்க்கப்போராட வேண்டுமாகில் அவர்களுக்கு மத்தியில் உள்ள சுயநல குறுகிய எண்ணங்களும் அழிக்கப்பட வேண்டியனவாகும். மத, சாதி பிரதேசவேறுபாடுகளும், ஏனைய இனங்களை விட தமிழினம் மேலானது என்ற குறுகிய தேசிய வாதம் மற்றும் பெண்ணடிமைத்தனம் என்பவை ஒழிக்கப்படல் முக்கியம். எங்கள் முன்னணி தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உள்ள இந்த குறுகிய எண்ணங்களையும் போக்குகளையும் உறுதியாக எதிர்க்கும். வடபகுதியில் இன்னமும் நிலவும் சாதி, வேறுபாடுகளை ஒழிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கப் போராடும். தனக்குள் அடிமை விலங்குகளைக் கொண்டிருக்கும் ஒரு சமூகம் தன்மீதான அடிமை விலங்கை உடைத்தெறிய முடியாதது ஆகும்.

‡ ‡ ‡

## தமிழ் பேசும் மக்களின் போராட்டமும் சிங்கள மக்களும்.

சிங்கள மக்களைப் பொறுத்து எமக்கு எவ்வித குரோத எண்ணங்களும் இல்லை. நாம் விரும்புவது சிங்கள மக்கள் இன வெறியர்களதும் ஆளும் வர்க்கங்களதும் சூழ்ச்சிக்கு பலியாகக் கூடாது என்பதே. தமிழ் பேசும் மக்களும் சிங்கள மக்களும் ஒருவருக்கு ஒருவர் எதிரியல்ல. முன்னர் நாம் சுட்டிக்காட்டியது போன்று நமக்குள் பல பொதுவான அடிமை விலங்குகள் உண்டு. இவைகளைவிட விசேடமான ஒருவிலங்கு தமிழ் பேசும் மக்களுக்கு உண்டு. அதுவே இன ஒடுக்குமுறையாகும். இந்த இன ஒடுக்குமுறையானது தமிழ்பேசும் மக்களால் சகித்துக்கொள்ள முடியாத சுமையாகி உள்ளது. அவர்கள் மீதான அடக்குமுறையின் பிரதான வடிவம் இந்த இன ஒடுக்குமுறையே. இதனால் அவர்களின் பிரதான போராட்டம் இனஒடுக்குமுறைக்கு எதிரானதாக அமைவது தவிர்க்க முடியாதது.

இன்று தமிழ் பேசும் மக்களின் எதிரியும் சிங்களமக்களின் எதிரியும் ஒன்றே. அது இலங்கையின் நவகாலனித்துவ அரசேயாகும். தமிழ்பேசும் மக்களை இவ்வரசு முற்றாக அழித்தொழித்துவிடினும்கூட சிங்களமக்களின் வேலையில்லாத் திண்டாட்டம், நிலமில்லாப் பிரச்சனை சுரண்டல், அடக்குமுறை என்பன தீர்ந்துவிடப்போவதில்லை என்பதை நாம் அறிவோம். எனவே சிங்கள மக்களும், தமிழ்பேசும் மக்களும் தோளோடு தோள்நின்று தமது பொது எதிரியைத் தோற்கடிக்கும் போராட்டத்தில் ஈடுபடுதல் அவசியம் என நாம் கோருகின்றோம். ஒருவர் பிரச்சினையை மற்றவர் சரியாக புரிந்துகொள்வதின் மூலமே இந்த ஒற்றுமைப்பட்ட போராட்டம் சாத்தியமாகும். சிங்களமக்கள் தாம் பெரும்பான்மையினம் என்ற கோதாவில் சிறுபான்மையினரைப் பொறுத்து தாராளமாக நடந்துகொள்ள முன்வரவேண்டுமென நாம் கோருகின்றோம். அப்போதே சிறுபான்மையினங்களின் நம்பிக்கையை அவர்கள் பெறமுடியும். இந்நாடு பிளவுபடுவதும் பிளவுபடாமல் இருப்பதும் தங்கியிருப்பது சிறுபான்மையினர் கையில் அல்ல அது



சிங்களப்பெரும்பான்மையினர் கையில்தான் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

சிங்களமக்களைப் பொறுத்து நாம் சுருக்கமாகக் கூறிக்கொள்வது இதுதான்: நாம் ஒரே ஆட்சிக்குள் வாழ்கிறோம். உங்களுக்கும் எங்களுக்கும் எதிரி ஒன்றே. நீங்கள் எங்கள் பிரச்சினைகளையும் எமது போராட்டத்தின் தருமத்தினையும் புரிந்துகொண்டு சமத்துவ உணர்வுடன் உங்கள் கைகளைத் தந்தால் அதனைப் பற்றிக்கொள்ள தயாராக இருக்கின்றோம். எங்களின் எதிரியைத் தோற்கடிப்பதற்கு உங்களிடம் இருந்து அவ்வகைப்பட்ட ஒரு பலமான ஆதரவை எப்பொழுதும் எதிர்பார்த்தே உள்ளோம். உங்களது ஆதரவு எமக்கு கிடைக்காதுபோனால் அது நம் இருவருக்கும் நஷ்டமானது. அது நமது பொது எதிரிக்கு லாபமானது. எமக்கு ஆதரவாக நீங்கள் உங்களது கரங்களை தந்தாலும் தராவிட்டாலும்சரி நமது எதிரிக்கு எதிரியென்றவகையில் நீங்கள் நடத்தும் போராட்டங்களை நாம் ஆதரிப்போம். விடுதலையை வேண்டிநிற்கும் மக்கள் என்ற வகையிலும், விடுதலைக்கு போராடும் இயக்கம் என்ற வகையிலும் நாம் பிரதிபலன்களை எதிர்பாராது நீதியின் பக்கம் நிற்போம்.

‡ ‡ ‡

## இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் போராட்டமும் சர்வதேசியமும்

நவீன விஞ்ஞான வளர்ச்சியானது உலகை மிக மிகச் சுருக்கிவிட்டது. ஒரு நாட்டினுள் ஏற்படும் அரசியல் மாற்றங்கள் அல்லது குழப்பங்கள் பிறிதொரு நாட்டை நேரிடையாய் அல்லது மறைமுகமாய் பாதிப்பதென்பது சர்வசாதாரணமான தொன்று. மூலதனக்கும்பல்கள் தமது தேச எல்லையையும் தாண்டி மூலதனக் குவிப்பை செய்வதனால் நெருக்கடிகள் ஏற்படும் யுகம் இது. ஆட்சிக்கவிழ்ப்பு, அரண்மனைச்சதிகள், அத்துமீறல்கள், நெருக்கடி நிலைமைகள், பேரம்பேசுதல், முகாம் போட்டிகள் என்பன இன்றய சர்வதேசிய அரசியலின் தினசரி சம்பவங்கள் ஆகியுள்ளன. இந்த நிலையில் ஒடுக்கப்படும் நாடுகளும் ஒடுக்கப்படும் மக்களும் சர்வதேசரீதியில் நெருங்கி வருதலும் இணைந்து குரல் எழுப்புவதும் அவசியமானதாகி உள்ளன.

தமிழ் பேசும் மக்களாகிய நாமும் ஒடுக்கப் படுபவர் என்கின்றவகையில் உலகெங்கிலும் உரிமைகளுக்கான போராட்டங்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களை நடாத்திக்கொண்டு இருக்கும் அனைத்துலக மக்களுடன் எமது குரல்களையும் இணைத்துக்கொள்கிறோம். உலகடங்கிலும் ஒடுக்கப்படும். மக்களுக்காக ஒடுக்கப்படும் மக்கள் குரல்கொடுப்பது பரஸ்பரம் அவரவரின் தார்மீகபலத்தை அதிகரிக்கச் செய்கின்றது. எனவே உலகின் எந்தப்பகுதியிலாயினும்சரி நிகழக்கூடிய அடக்கு முறைகளுக் கெதிராக நாம் வன்மையான கண்டனங்களைத் தெரிவிக்கின்றோம். ஒடுக்கு முறைக் கெதிராக போராடும் மக்களுக்கு உறுதியான எமது ஆதரவை என்றென்றும் நல்குவோம். நாடுகளுக்கும் இனங்களுக்கும் இடையில் சமத்துவமும் சுதந்திரமும் பேணப்படல் வேண்டுமென கோருகிறோம். ஒரு இனத்தின் அல்லது நாட்டின் உள் விவகாரத்தில் பிறிதொரு இனம் அல்லது நாடு அத்துமீறி தலையிடுவதற்கு எவ்விதமான உரிமையும் கிடையாது எனவும் நாம் பிரகடனம் செய்கின்றோம். அந்தந்த நாடுகளின் அல்லது இனங்களின் தலையெழுத்தைத் தீர்மானிக்கும் சுயநிர்ணய உரிமை அந்தந்த நாடுகளுக்கு அல்லது இனங்களுக்கே இருத்தல் வேண்டும். ஜனநாயகத்தை அல்லது சமதர்மத்தை காப்பதற்காய் எனக்கூறி வல்லரசுகளால் சிறிய நாடுகள் மீதும் பலவீனமான நாடுகள் மீதும் நடாத்தப்படும் சகல இராணுவத் தலையீடுகளையும் ஆக்கிரமிப்பு எனக் கண்டிக்கிறோம். மக்கள் சக்தியில் பூரண நம்பிக்கையுண்டு. வரலாற்றை உருவாக்குபவர்கள் மக்களே. உலகின் எந்த சக்தியாலும் அசைக்கமுடியாத இரும்புக்கோட்டை மக்களே. உண்மைக்கும், நீதிக்குமான மக்களின் போராட்டத்தில் கருவிகள் அல்ல மக்களே தீர்க்கமான அம்சம் என்பதை மக்களின் போராட்ட வரலாறு எடுத்துக்காட்டியுள்ளது. நீதிக்காய்ப் போராடும் விடுதலை இயக்கங்களுடனும் மக்கள் இயக்கங்களுடனும் நட்பையும் தொடர்பையும் வளர்த்தெடுக்க நமது முன்னணி முயற்சிக்கும் உண்மைக்கும் நீதிக்குமான போராட்டத்தில் இறுதி வெற்றி உலக மக்களுக்கே.

## முடிபுரை:

**அன்பார்ந்த தோழர்களே! நண்பர்களே!**

எமது முன்னணியின் கொள்கைகளையும், நோக்கங்களையும் அவற்றிற்கு அடிப்படையிலான பின்னணிகளையும் முடிந்த அளவு புரியவைக்க இவ்வறிக்கை மூலம் முயற்சித்துள்ளோம். நாம் இயக்கப்போகும் சமூகசூழ்நிலைகளையும் நமது நடைமுறை வேலைத்திட்டங்களையும் தெளிவாக அறிந்துகொண்டு நமது முன்னணியை ஒரு பரந்த மக்கள் இயக்கமாக கட்டி எழுப்புவதற்கு சங்கற்பம் பூண்டுள்ளோம். பாராளுமன்ற சந்தர்ப்பவாத அரசியலை நாம் நிராகரிக்கின்றோம். எம்மை நாம் ஒரு விடுதலை இயக்கமாகவே பிரகடனம் செய்கின்றோம்.



தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு கிடைக்கக்கூடிய சகலவிதமான நேர்மை கொண்ட ஆதரவுகளையும் வாய்ப்புகளையும் நாம் பயன்படுத்துவோம். தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அனைத்துலக மக்களின் போராட்டங்களுடன் இணைப்போம். உலகில் தமிழ்பேசும் மக்கள் தலைநிமிர்ந்து நிற்பதற்கு எமது உறுதியான செயற்பாடுகளை அர்ப்பணிப்போம். நமது விடுதலைப்பயணம் கரடு, முரடான பாதையிலும் உயிர் அர்ப்பணிப்புகள் மிக்க பாதையிலும் செல்ல வேண்டியது என்பதை நாம் புரிந்துள்ளோம். எமது பாதை எவ்வளவு சிரமமாய் இருப்பினும் அதன் முடிவு பிரகாசமிக்கதாகும்

**தமிழ் பேசும் மக்களே!**

எமது பாரம்பரிய பிரதேசங்களை பாதுகாக்கவும் எம்மீதான இராணுவ ஒடுக்கு முறைகளை முறியடிக்கவும் ஒருமனத்துடனும், திடத்திடனும் ஐக்கியமாகி அணிதிரளுமாறு உங்களை அறைகூவியழைக்கிறோம். எமது ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்போம்!
விடுதலையை வென்றெடுப்போம்!

# தமிழ் பேசும் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுப்போம்.

www.tamilarangam.net

# குறிப்பு

இவ்வறிக்கையானது 13-09-80, 14-09-80 ஆகிய தினங்களில் நடைபெற்ற தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியின் முதலாவது தேசிய மகாநாட்டில் வாசிக்கப்பட்டு பின்பு திருத்தி எழுதப் பட்டது. எமது இயக்கத்திற்குள்ளும் நாட்டிலும் ஏற்பட்ட மாற் றங்கள், சூழல்கள் காரணமாக உரிய நேரத்தில் இதனை வெளிக் கொணர முடியாமைக்கு வருந்துகிறோம். இவ்வறிக்கையில் உள்ள குறைநிறைகளை சுட்டிக்காட்டி எமது வளர்ச்சிக்கு உதவிபுரியு மாறு உங்களை கேட்டுக்கொள்கிறோம்.

— த. ம. ஜ. மு. மத்தியகுழு —

இந்நூல் நெடுந்தீவு 11ம் வட்டாரத்தைச் சேர்ந்த சி. சண்முக நாதன் என்பவரால் அளவெட்டி ஜெயா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

www.tamilarangam.net

மக்கள் மட்டுமே வரலாற்றை
உருவாக்கும் சக்தி கொண்டவர்கள்

மக்கள் இயக்கத்தை
உருவாக்குவோம்.

தமிழ் பேசும் மக்களின்
தேசிய விடுதலைப் போராட்டத்தை
முன்னெடுப்போம்.

தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி